உ

சிவமயம்

'தமிழ்க்கடல்', 'சிவமணி'

'சிவம்பெருக்குஞ்சீலர்'

'வண்கவி வள்ளல்'

ராய. சொ.

# பூசைப்பாமாலை

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

உ

சிவமயம்

# பூசைப்பாமாலை

## நூல்முகம்

சிவபூசையில் நான் படிக்கும் தெய்வப் பாடல்களால் தொடுக்கப்பெற்ற மாலை இது. நான் சிவபூசை செய்ய வேண்டுமென்று, என் அரிய நண்பர்களான சிவ பூசைச் செல்வர்கள் முத்த. வெ. சொ., 'தமிழ்வள்ளல்' சேவு. மெ. ஆதியோர் அடிக்கடி கூறி வந்தனர்.

1958 அக்டோபர் 31ஆம் நாள் என் அறுபது ஆண்டு நிறைவு மணிவிழாவை இந்துமதாபிமான சங்கம் சிறப்பாகக் கொண்டாடி என்னைப் பெருமைப் படுத்தியது, அவ்விழாவில் சிவாகம நூற்கு எல்லை கண்ட, சைவசித்தாந்த ஞானபானு ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் தலைமைதாங்கி அருளினார்கள். திருஐந்-தெழுத்தை முறையாக ஓதிப் பேறு பெற வேண்டும் என்று அன்று என் உள்ளத்தே தோன்றியது.

உபதேசம் செய்தற்குப் பெரும் தகுதி வாய்ந்த அவர்களிடம் சமய தீட்சை பெற முடிவு செய்தேன். மணிவாசகப் பெருமான், "கடவுளுக்கு ஊர் ஏது?" என்ற வினாவை எழுப்பி,

## முதலாவது பாட்டின் பொருள்

செல்வத்தை நல்கும்.

செய்கின்ற காரியங்கள் கைகூடச் செய்யும்.

நல்லபேச்சோடு கூடிய சிறந்த நாவன்மையையும், பிற பெருமைகளையும் பெருகச் செய்யும்.

அழகைத்தரும்.

ஆதலினால்,

தேவர்களும், ஆனைமுகத்தோடு கூடிய விநாயகக் கடவுளை அன்புகொண்டு கைகூப்பித் தொழுவர்.

திரு: செல்வம். கருமம்: காரியம். செஞ்சொல்: செம்மையான உரை. பீடு: பெருமை, உரு: அழகு, காதல்: அன்பு.

பாட்டு எண். 1

# தொடக்கம்

## விநாயக வணக்கம்

### பதினோராம் திருமுறை

திருவாக்கும்; செய்கருமம்
கைகூட்டும்; செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்
பெருக்கும் - உருவாக்கும்;
ஆதலால் வானோரும்
ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

— கபிலர்.

## 2-ஆவது பாட்டின் பொருள்

கருணை காட்டாது தள்ளிவிட்டால் எளியேனை, "அஞ்சாதே!" என்று உரைக்க இங்கு யார் இருக்கின்றார்?

என்னை ஒரு பொருட்டாக நினைந்து, யான் இருக்கும் இடம் வந்து ஆண்டு கொண்ட பொன் போன்றவனே! பொன்னம்பலத்திலே கூத்தாடுகின்றவனே!

மயக்கம் நிறைந்த மனத்தோடு, உன்னைப்பிரிந்து வருந்துகின்ற என்னை, "வா!" என்று அழைத்து, உன்னுடைய அறிவு நிரம்பிய கூட்டத்தை எனக்குக் காட்டாயானால் நான் செத்துப்போன பிறகு உலகத்தார் என்னைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்களா?

மருள்: மயக்கம், தெருள்: அறிவு.

பாட்டு எண். 2

# சிவ வணக்கம்

**திருவாசகம்**

அருளாது ஒழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர் இங்கு;

பொருளா என்னைப் புகுந்து ஆண்ட
பொன்னே! பொன்னம் பலக்கூத்தா!

மருளார் மனத்தோடு உனைப்பிரிந்து
வருந்து வேனை வாஎன்று உன்

தெருளார் கூட்டம் காட்டாயேல்
செத்தே போனால் சிரியாரோ?

—மணிவாசகர்.

## 3-ஆவது பாட்டின் பொருள்

பாண்டிய மன்னனின் வெம்மை நோயை நீக்கிய சீர்காழி வேந்தனின் பாதத்துக்கு வணக்கம்.

கடலின்மீது கல்லைத் தோணியாக்கி அதனை மிதக்கச் செய்து கரைசேர்ந்த பெருமான் தாளுக்கு வணக்கம்.

என்றும் வாழவல்ல திருநாவலூரில் பிறந்து அருளிய வலிய தொண்டரின் கழலுக்கு வணக்கம்.

ஊழிநாள்வரை, பெருகிய புகழ்வாய்ந்த திருவாதவூரர் திருவடிகளுக்கு வணக்கம்.

பூமியர்கோன்: பாண்டியன். வெப்பு: சுரநோய், புகலியர் கோன்: திருஞானசம்பந்தர், ஆழி: கடல், மிதப்பு: தெப்பம். பிரான்: திருநாவுக்கரசர், வன்தொண்டர், சுந்தரமூர்த்திகள். திருவாதவூரர்: மாணிக்கவாசகர். கழல், அடி, பதம், தாள், காலைக்குறிக்கும், ஒரு பொருட் சொற்கள், கழல், அடி, பதம், என முதல் மூன்று இடத்தும் சொல்லி, மணிவாசகரைக் கூறுங்கால், "திருத்தாள்" என்று செப்புவது சிறந்த அமைப்பு.

பாட்டு எண். 3

## நால்வர் வணக்கம்

சேக்கிழார் புராணம்

பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல்போற்றி!

ஆழிமிசைக் கல்மிதப்பில்
அணைந்தபிரான் அடிபோற்றி!

வாழிதிரு நாவலூர்
வன்தொண்டர் பதம்போற்றி!

ஊழிமலி திருவாத -
ஊரர்திருத் தாள்போற்றி!

—உமாபதிசிவம்.

4-ஆவது பாட்டின் பொருள்

சிதம்பரத்தில் வாழ்கின்ற அந்தணர்களை முதலாகக்கொண்ட சிறப்புப் பெற்ற, பழமையான திருத்தொண்டத் தொகையில் வந்த அடியார்கள் அடிகளுக்கு வணக்கம்.

விரைவாக அவ்அடியார் வரலாற்றுக் காதையை உலகம் அறிந்து கொள்ளுமாறு விரித்து அருளிய செல்வம் நிறைந்த, குன்றத்தூரில் பிறந்த சேக்கிழார் அடிகளின் சேவடிகளுக்கு வணக்கம்.

தொல்லை: பழமை. திருத்தொண்டத்தொகை சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய அடியார் வணக்கப் பதிகம், ஒல்லை: விரைவு. குன்றத்தூர்: தொண்டை நாட்டில் சென்னைக்கு அணித்தே உள்ள சேக்கிழார் பிறந்த ஊர்.

பாட்டு எண். 4

# அடியார் வணக்கம்

சேக்கிழார் புராணம்

தில்லைவாழ் அந்தணரே
முதலாகச் சீர்படைத்த

தொல்லையதாம் திருத்தொண்டத்
தொகையடியார் பதம்போற்றி !

ஒல்லை அவர் புராணகதை
உலகறிய விரித்துரைத்த

செல்வமலி குன்றத்தூர்ச்
சேக்கிழார் அடிபோற்றி !

—உமாபதிசிவம்.

## 5-ஆவது பாட்டின் பொருள்

சிவம் என்ற கடலிலே குடைந்து ஆடுவார்.

செம்மையான திரு ஐந்தெழுத்தே விளங்கும் நாவை உடையார்.

இனிய தமிழையும், வடமொழியையும் நுகர்ந்து உணர்ந்தார்.

வெண்திருநீறு படிந்த உடம்பினை உடையார்.

தவத்தினால் மேம்பட்டார்.

குளிர்ந்த கருணையுடையார்.

பலருடைய சிவபூசைக்கு உற்ற துணையாக அமைந்தார்.

ஈடு இல்லாதவர்.

பிறவிக் கடலினின்றும் என் போன்றோரைக் கரையேற்றும் ஈசான சிவாச்சாரியாரின் அடிகளை வணங்கி நல்வாழ்வு பெறுவோம்.

பாட்டு எண். 5

## குரு வணக்கம்

சிவக்கடலில் திளைத்திடுவார் ;
செய்யதிரு ஐந்தெழுத்தே
திகழும் நாவார் ;

சுவைத்தமிழும், வடமொழியும்
துய்த்துணர்ந்தார் ; வெண்ணீறு
துதைந்த மெய்யார் ;

தவத்துஉயர்ந்தார் ; தண்ணளியார் ;
சிவபூசைக்கு உறுதுணையார் :
தன்னேர் இல்லார் ;

பவக்கடல்நின்று எமைஏற்றும்
ஈசான குருபாதம்
பணிந்து வாழ்வாம்.

—ராய. சொ.

இத்துணை சிறப்பு வாய்ந்த குழந்தையன் செட்டியார் அவர்கள், தம் அருமை மனைவி வள்ளியம்மை ஆச்சியுடனும், பெருமை மிக்க மகன் ராமனுதன் அவர்களுடனும், மக்கள், மருமக்கள், மற்றும் அன்பர்கள் அனைவருடனும் மென்மேலும் எல்லா நலன்களும் பெற்றுப் பல்லாண்டு இனிது வாழ்க என இறைஅருளை நினைந்து வணங்குகின்றோம்.

வணக்கம்.

காளயுக்தி,
ஐப்பசி, யஅ.,
4—11—1978

சுப. அருணுசலம்.

அற்புதம்ஆர் திருமுறைத்தேன்
ஆழி மூழ்கி,
ஆழ்வார்கள் பாசுரத்துஇன்
அமுதம் உண்டு,

பற்பலவாம் திருத்தலங்கள்
பரவிப் போற்றி,
பரமன் அடிக்கு அன்புசெயும்
பணிகள் பூண்டு,

சற்குருவாம் ஈசானச்
சான்றோன் காட்டத்
தனித்ததிரு ஐந்தெழுத்தின்
சாரம் கொண்டு,

பொற்புஅமைந்த சிவபூசைப்
புனிதன் ஆகிப்
புண்ணியம்சேர் சிவமணியாய்ப்
பொலிந்து நின்றாய்!

கவிஞர் அமிர்தலிங்கன்

தாதாடு பூஞ்சோலைத்
தத்தாய்! நமைஆளும்
மாதாடும் பாகத்தன்
வாழ்பதிஎன்?—கோதாட்டி,
பத்தரெலாம் பார்மேல்
சிவபுரம்போல் கொண்டாடும்
உத்தரகோச மங்கை
ஊர்.

என்று வாய்கொள்ளாமல் பாடிய உத்தரகோசமங்கைத் தலத்திலேயே உபதேசம் பெறுவது என்றும், அதற்கு ஏற்ற நாள், கூத்தப்பிரானின் சிறந்த அபிடேக நாளாகிய மார்கழித்திருஆதிரை நாள் என்றும் முடிவு செய்தோம். அதன்படி 1958 டிசம்பர் 25ஆம் நாள் இரவு திருவாதிரைத் தொடக்கத்தில் திருஐந்து எழுத்து உபதேசம் பெறுவதாகத் திட்டம். அங்குச் சென்றவுடன் சிவாச்சாரிய சுவாமிகள், "திருவாசகத்தில் ஈடுபாடுடைய நீங்கள் திருவாசக பூசை, இன்று தொடங்கிவிட வேண்டும்" என்று கட்டளை இட்டார்கள். திருவருள் கூடிவிட்டது. "சரி" என்று சொன்னேன்.

நானும் என் மனைவியும் திருஉத்தரகோச மங்கை இறைவன் திருமுன்னர் சமய தீட்சை பெற்று, திருவாசக பூசை எழுந்தருளச் செய்து கொண்டேன். அது சில நாட்களில் சிவபூசையாக மலர்ந்தது. திருவாசகத்துக்குப் பூசை செய்த நான், திருவாசகம் எந்தக் கடவுளைப் பூசிக்கின்றதோ அந்தக் கடவுளைப் பூசை செய்யும் பேற்றை விரைவில் எய்தியது என் நல்ஊழேயாகும்.

பூசை தொடங்கியது. உத்தரகோச மங்கையிலாதலின், அங்கு இறைவியோடு எழுந்தருளியிருக்கின்ற இறைவன் திருப்பெயராகிய "மங்களேசுவரி உடனுய மங்களேசுவர சுவாமி" என்ற திருப்பெயரே என் வழிபடு கடவுளுக்குக் குருநாதரால் அளிக்கப் பெற்றது அன்று தொட்டு,

"திருவாய் பொலியச் சிவாய நம என்று நீறணிந்து" மகிழ்ந்து வருகின்றேன்.

'அருச்சனை பாட்டேயாகும்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்து அருளியபடி, பூசையில் உருக்கமான பல பாடல்களைப் பாடி இன்பம் எய்துகின்றேன். இப்பாடல்களைத் தொகுத்து மாலையாக்க வேண்டும்; அப்படிச் செய்தால் அது பலருக்குப் பயன்

படும் என்றனர் அன்பர்கள். இப்பாடல்களை என் இராயவரம் 'பெரியகுழந்தை' முன்னரே படி எழுதிவைத்துக்கொண்டது. எனவே இம்மாலை இன்று மலர்கின்றது.

இப்பாமாலையில் நாற்பது தெய்வப் பாக்கள் இணைந்திருக்கின்றன. முதலில் விநாயக வணக்கம். பிறகு சிவ வணக்கம். அதன் பின் சமயாச்சாரியார் நால்வர் வணக்கம். அதற்குப் பிறகு சிவனடியார் வணக்கம். அதற்கு மேல் குரு வணக்கம். அதன் பின் பூசை தொடங்கி, அபிடேகம், அலங்காரம், ஆகியவற்றை முடித்து மலர் வணக்கம். மலர் வணக்கத்தில் பத்துத் திருவாசகப் பாடல்கள். அது முடிந்ததும் ஆராதனை. அதற்கு அப்பால் பாராயணம். பாராயணத்தில் முதற்பாட்டு உத்தரகோச மங்கையைப் பற்றிய திருவாசகம்.

உத்தரகோசமங்கையில் பூசை எழுந்தருள்வித்ததும், இறைவன் திருமுன்னர் ஓர் திருவாசகம் பாடும்படி குருமூர்த்திகள் கட்டளை இட்டார்கள். அப்போது என் உள்ளத்தே தோன்றி, உணர்ச்சியோடு நான் பாடிய

பாடல் அது. 'கடையவனேனே' என்பது அப்பாட்டு. அதனைப் பாராயணத்தில் முதலாக வைத்திருக்கின்றேன்.

அதைத் தொடர்ந்து சைவ முறைப்படி பன்னிரண்டு திருமுறைகள். திருமுறைக்கு ஒரு பாடல். எட்டாம் திருமுறை இரண்டு நூல். ஆதலின் திருவாசகத்து ஒன்றும், திருக்கோவையாரில் ஒரு பாடலுமாக எட்டாம் திருமுறைக்கு இரண்டு பாடல்கள். திருவிசைப்பாவுக்கு ஒரு பாடலும், திருப்பல்லாண்டிற்கு ஒரு பாடலுமாக ஒன்பதாம் திருமுறைக்கு இரண்டு பாடல்கள். எனவே திருமுறை பன்னிரண்டிற்குப் பாடல்கள் பதினான்கு.

அதன் பின் சைவம் வளர்த்த, பின்வந்த பெரியவர்களாகிய பட்டினத்தடிகள் பாடல் ஒன்று; தாயுமான சுவாமிகள் பாடல் ஒன்று. அதை அடுத்து, சிவபெருமானின் வடிவத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டும் வரதுங்கராம பாண்டியன் பாடல் ஒன்று. இவற்றோடு சிவ வணக்கம் முடிவு பெறுகின்றது.

தொடர்ந்து, சிவனடியாருள் தலை நின்றவராகிய மணிவாசகப் பெருமான் மீது சிவஞான சுவாமிகள் பாடிய வணக்கப் பாடல் ஒன்று. அதன்பின் வாழ்த்து. இதோடு பாராயணம் முடிகின்றது.

பிறகு நாள் தோறும் அமைக்கும் சந்தனத்தால் ஆகிய "மூர்த்தி"யை உட்கொள்ளும் போது, அதற்குப் பொருத்தமான, "கைப்போது மலர்தூவி" என்ற அப்பர் சுவாமிகள் தேவாரம். பின் ஒடுக்கத்தில் அதற்கு ஏற்ற "மண் பொருந்தி வாழ்பவர்க்கும்" என்ற அப்பர் தேவாரம்.

முடிவில் ஒரு விநாயக வணக்கம். இறுதியாக, "சீதமழை முகில் பொழிக!" என்ற திரிகூட ராசப்பக் கவிராயரின் ஒரு நல்வாழ்த்துப்பாடல். இதோடு பூசைப் பாடல் நிறைவு பெறுகின்றது.

மொத்தம் நாற்பது பாடல்கள். ஒவ்வொரு பாடலுக்கும் பக்கத்தில் விளக்கம் கொடுத்திருக்கிறது.

24-3-66. ராய. சொ.

# பூசைப் பாமாலை

# மலர் வணக்கம்

## 6-ஆவது பாட்டின் பொருள்

உடம்போடு கூடிய வாழ்க்கையைத் தாங்க மாட்டேன். சிவபெருமானே! வணக்கம்.

மேன்மையான முதியோனே! வணக்கம்.

எங்கள் இளையவனே! வணக்கம்.

ஒப்பற்ற ஒருவனே! வணக்கம்.

தேவர்கள் தலைவனே! வணக்கம்.

தில்லையில் நடனமாடுகின்றவனே! வணக்கம்.

எங்கள் மலமற்றவனே! உனக்கு வணக்கம். வணக்கம்.

தரிக்கிலேன்: பொறுக்கமாட்டேன். காயம்: உடம்பு. விடலை: காளைப்பருவம். நின்மலன்: அழுக்கு அற்றவன்.

பாட்டு எண். 6

## மலர் வணக்கம்—க

திருவாசகம்

தரிக்கிலேன் காய வாழ்க்கை;
சங்கரா! போற்றி! வான

விருத்தனே! போற்றி! எங்கள்
விடலையே! போற்றி! ஒப்பில்

ஒருத்தனே! போற்றி! உம்பர்
தம்பிரான்! போற்றி! தில்லை

நிருத்தனே! போற்றி! எங்கள்
நின்மலா! போற்றி! போற்றி!

—மணிவாசகர்.

7-ஆவது பாட்டின் பொருள்

நமச்சிவாய! உன்னைப் போற்றுகின்றேன்.

பாம்புகளை அணிந்தவனே! நான் மயக்க முடையேன்.

நமச்சிவாய! என உன்னை வணங்குகின்றேன்.

எனக்குப் போக்கிடம் வேறு இல்லை.

உன் ஐந்தெழுத்தையே சொல்லி உன்னைத் துதிக்கின்றேன்.

என்னை வெளியே தள்ளிவிடாதே.

உன் திரு ஐந்தெழுத்தையே சொல்லிச் சொல்லிக் கும்பிடுகின்றேன்.

வெல்க! வெல்க! வணக்கம். வணக்கம்.

புயங்கம்: பாம்பு. புகலிடம்: செல்லுமிடம். புறம்: வெளியே. போக்கல்: தள்ளிவிடாதே. கண்டாய்: முன்னிலை அசை.

பாட்டு எண். 7

## மலர் வணக்கம்—உ

திருவாசகம்

போற்றியோ நமச்சி வாய!
புயங்கனே! மயங்கு கின்றேன்;

போற்றியோ நமச்சி வாய!
புகலிடம் பிறிதொன்று இல்லை!

போற்றியோ நமச்சி வாய!
புறம்எனைப் போக்கல் கண்டாய்!

போற்றியோ நமச்சி வாய!
சயசய! போற்றி! போற்றி!

—மணிவாசக..

## 8-ஆவது பாட்டின் பொருள்

வணக்கம்.

என்போலும் பொய்யர்களை ஆளாக ஏற்றுக் கொள்ளும் வள்ளலே! வணக்கம்.

உன் திருவடிகட்கு வணக்கம்,

தலைவனே! வணக்கம். வணக்கம்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, விண், கதிர், திங்கள். உயிர் ஆகிய அட்ட மூர்த்தியான கடவுளே! உன் அருட் கடலாகிய புதிய தேன் என்னைக் காத்தருள்வதாக!

வெள்ளம்: கடல். மது: தேன். புவனம்: நிலம். இயமானன்: உயிர்.

பாட்டு எண். 8

## மலர் வணக்கம்—௩

**திருவாசகம்**

போற்றி!என் போலும் பொய்யர்,
தம்மைஆள் கொள்ளும் வள்ளல்;

போற்றி! நின். பாதம் போற்றி!
நாதனே! போற்றி! போற்றி!

போற்றி! நின் கருணை வெள்ளப்
புதுமது, புவனம், நீர்,தீக்

காற்று,இய மானன், வானம்,
இருசுடர்க் கடவு ளானே!

**—மணிவாசகர்.**

## 9-ஆவது பாட்டின் பொருள்

கடவுளே! வணக்கம்.

என்னை அறிந்து கொண்டு அருள்வாயாக! வணக்கம்.

நான் பற்றை விடுமாறு என் உள்ளே புகுந்து, உருக்கி என்னை ஆட்கொள்ள வேண்டும்; வணக்கம்.

இந்த உடலை நீக்கி, விரைந்து மேலான வீடளித்து அருளுக! வணக்கம்.

சடையிலே கங்கையைத் தாங்கிய
சிவபெருமானே! வணக்கம். வணக்கம்.

விட: பற்றை நீக்க. களைந்து: நீக்கி. ஒல்லை: விரைவாக. உம்பர்: மேலுலக வாழ்வு.

பாட்டு எண். 9

## மலர் வணக்கம்—ச

திருவாசகம்

கடவுளே! போற்றி! என்னைக்
கண்டுகொண்டு அருளு போற்றி!

விட, உளே உருக்கி, என்னை
ஆண்டிட வேண்டும்; போற்றி!

உடல்இது களைந்திட்டு ஒல்லை
உம்பர் தந்து அருளு, போற்றி!

சடையுளே கங்கை வைத்த
சங்கரா! போற்றி! போற்றி!

— மணிவாசகர்.

## 10-ஆவது பாட்டின் பொருள்

சிவபெருமானே! வணக்கம்.

உன்னைத் தவிர வேறு பற்றுக் கோடு எனக்கு இல்லை; வணக்கம்.

அழகிய, கொதித்து எழுகின்ற பாம்புப்படம் போன்ற அல்குலையும், சிவந்த வாயினையும் வெள்ளிய பற்களையும், கருமை நிறம் வாய்ந்த வாள் போன்ற கண்களையும் உடைய நங்கையாகிய உமையவளை உடம்பில் ஒரு பங்கில் கொண்டவனே! வணக்கம்.

பெரிய காளையைச் செலுத்துபவனே! வணக்கம்.

இவ் உலகத்தில் இந்த வாழ்வை நான் பொறுக்க மாட்டேன்; இகழ்ந்து வெறுக்கின்றேன்.

எம் தலைவனே!

சரண்: புகலிடம். கோலம்: அழகு. அரா: பாம்பு.

பாட்டு எண். 10

# மலர் வணக்கம்—ரு

திருவாசகம்

சங்கரா ! போற்றி ! மற்றோர்
சரண் இலேன் போற்றி! கோலப்

பொங்குஅரா அல்குல், செவ்வாய்,
வெண் நகை, கரிய வாள்கண்,

மங்கையோர் பங்க! போற்றி !
மால்விடை ஊர்தி! போற்றி !

இங்குஇவ்வாழ்வு ஆற்ற கில்லேன் ;
எம்பிரான் ! இழித்திட் டேனே.

—மணிவாசகர்.

## 11-ஆவது பாட்டின் பொருள்

என்னை நானே பழித்துக் கொண்டேன்.

எங்கள் தலைவனே! வணக்கம். வணக்கம்.

உன்னைப் பழித்தேன் அல்லேன். என்னை ஆட்கொண்ட உன் திருவடிகட்கு வணக்கம்.

நான் செய்த தவறுகளை எல்லாம் பொறுத்து அருளுதல் பெரியவர்க்குக் கடமையே; வணக்கம். என்னுடைய இவ்உடம்போடு கூடிய வாழ்க்கையை நீக்கிவிடு. வணக்கம்.

மேலான சிவலோகத்து எம் தலைவனே!

பாட்டு எண். 11

## மலர் வணக்கம்—சூ

திருவாசகம்

இழித்தனன் என்னை யானே;
எம்பிரான்! போற்றி! போற்றி!

பழித்திலேன் உன்னை; என்னை
ஆளுடைப் பாதம் போற்றி!

பிழைத்தவை பொறுக்கை எல்லாம்
பெரியவர் கடமை போற்றி!

ஒழித்திடுஇவ் வாழ்வு போற்றி!
உம்பர்நாட்டு எம்பி ரானே!

— மணிவாசகர்.

## 12-ஆவது பாட்டின் பொருள்

எம் தலைவனே! போற்றி!

மேல் உலகத்துள்ள அவ்அத் தேவர்களுக்கு எல்லாம் ஏறு போல்பவனே! வணக்கம்

பூங்கொம்பு போன்ற இடையை உடைய உமையவட்கு ஒரு கூறு அளித்தவனே! வெண்ணீறு அணிந்தவனே! வணக்கம்.

செம்மேனித் தலைவனே! வணக்கம்.

தில்லைத் திருச்சிற்றம்பலத்து நடனமாடுகின்றவனே! வணக்கம்.

மேல் உலகத் தலைவனே! வணக்கம்.

என்னை ஆட்கொண்ட ஒப்பற்றவனே! வணக்கம்.

பாட்டு எண். 12

# மலர் வணக்கம்—எ

திருவாசகம்

எம்பிரான்! போற்றி! வானத்து
அவரவர் ஏறு போற்றி!

கொம்பர்ஆர் மருங்குல் மங்கை
கூற!வெண் நீற! போற்றி!

செம்பிரான் போற்றி! தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி!

உம்பரா! போற்றி! என்னை
ஆளுடை ஒருவ போற்றி!

— மணிவாசகர்.

## 13-ஆவது பாட்டின் பொருள்

தனிமுதல்வனே! வணக்கம்.

ஈடில்லாத எந்தையே! வணக்கம்.

அமரர்களின் ஆசானே! வணக்கம்.

எங்கள் அழகிய இளம்தளிரே! வணக்கம்.

என்னை "வா!" என்று நின்னிடத்து ஏற்றுக் கொள்ளல் வேண்டும்; வணக்கம்.

எளியேனின் தனிமையைப் போக்கி,
நின் திருவடிகளை எனக்கு அருளல் வேண்டும்;
வணக்கம்.

பாட்டு எண். 13

## மலர் வணக்கம்—அ

திருவாசகம்

ஒருவனே! போற்றி! ஒப்பில்
அப்பனே! போற்றி! வானோர்

குருவனே! போற்றி! எங்கள்
கோமளக் கொழுந்து போற்றி!

"வருக" என்று என்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி!

தருகநின் பாதம் போற்றி!
தமியனேன் தனிமை தீர்த்தே.

— மணிவாசகர்.

## 14-ஆவது பாட்டின் பொருள்

முடிந்த அன்பு வடிவான அன்பர்கட்கு அவரை விட அன்புடையவனே! வணக்கம்.

என் பொய்ம்மை ஒழுக்கத்தை ஒழித்து, என்னை ஆட்கொண்டு கருணை சுரக்கும் உன் பெருமைக்கு வணக்கம்.

கொட்டிய நஞ்சைக் குடித்து, தேவர்களுக்கு அமுதினை நல்கிய வள்ளலே! வணக்கம்.

நிறைந்த நின் திருவடியை நாயனைய எனக்குத் தந்தருளல் வேண்டும். வணக்கம்.

வார்தல்: வழிதல். அயின்று: உண்டு.

பாட்டு எண் 14

## மலர் வணக்கம்—கூ

திருவாசகம்

தீர்ந்தஅன்பு ஆய அன்பர்க்கு
அவரினும் அன்ப! போற்றி!

பேர்ந்தும்என் பொய்ம்மை ஆட்கொண்டு
அருளிடும் பெருமை போற்றி!

வார்ந்தநஞ்சு அயின்று, வானோர்க்கு
அமுதம்ஈ வள்ளல்! போற்றி!

ஆர்ந்தநின் பாதம் நாயேற்கு
அருளிட வேண்டும் போற்றி!

— **மணிவாசகர்.**

## 15-ஆவது பாட்டின் பொருள்

இந்த உலகம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு, ஆகிய ஐம்பெரும் பூதம் ஆனவனே! வணக்கம்.

எல்லா உயிர்கட்கும் ஆதியாக இருந்து, நீ 'பிறவாயாக்கைப் பெரியோன்' ஆனாய். வணக்கம்.

அனைத்துயிர்க்கும் முடிவு அருள்பவனாக இருந்து, நீ முடிவில்லாதவன் ஆனாய்; வணக்கம்.

ஐம்பொறிகளும் உன்னோடு பொருந்தி வருத்தாத சார்பு உடையவனே! வணக்கம்.

கால்: காற்று.

பாட்டு எண். 15

# மலர் வணக்கம்—ய

திருவாசகம்

போற்றி!இப் புவனம், நீர்,தீ,
காலொடு வானம் ஆனாய்;

போற்றி!எவ் உயிர்க்கும் தோற்றம்
ஆகி,நீ தோற்றம் இல்லாய்!

போற்றி!எல் லாஉ யிர்க்கும்
ஈறாய்ஈ றின்மை ஆனாய்!

போற்றி!ஐம் புலன்கள் நின்னைப்
புணர்கிலாப் புணர்க்கை யானே!

— மணிவாசகர்.

# பாராயணம்

## 16-ஆவது பாட்டின் பொருள்

கடைப் பட்டவனுகிய என்னை அருளினுல் என்னுள் கலந்து ஆண்டு அருளிய விடை ஏறும் பெருமானே! என்னை விட்டுவிடுவாயா?

வலிமிக்க புலியை உரித்துத் தோலை உடையாக உடுத்தவனே!

நிலைபெற்ற உத்தரகோசமங்கைத் தலத்திற்கு மன்னனே!

சடை தாங்கியவனே!

தளர்ச்சி அடைந்தேன். எம்தலைவனே! என்னைத் தாங்கிக்கொள்வாயாக!

கண்டாய்: முன்னிலை அசை.

பாட்டு எண். 16

திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி
னுல்கலந்து ஆண்டுகொண்ட

விடையவ னே!விட் டிடுதிகண் -
-டாய்!விறல் வேங்கையின்தோல்

உடையவ னே!மன்னும் உத்தர
கோசமங் கைக்குஅரசே!

சடையவ னே!தளர்ந் தேன்;எம்-
-பிரான்!என்னைத் தாங்கிக்கொள்ளே.

— மணிவாசகர்.

17-ஆவது பாட்டின் பொருள்

குருதி கொட்டும் முடை நாற்றமுடைய தலை ஓட்டைக் கையில் ஏந்தி ஊர் ஊராகப் பிச்சை ஏற்றுத் திரிவர்.

உமையவட்கு உடம்பில் ஒறு கூறு அளித்தவர்.

தாணுகப் பாயும் காளையில் ஏறுகின்ற சிவபெருமான்.

நெருப்பு வடிவினர்; தங்கியிருக்கும் கோயில் எது?

மான்கள் பாய, அந்த அதிர்ச்சியில் குரங்குகள் வயலுக்கு அணித்தே உள்ள மரத்தில் ஏறிச்சாட, அதனால் அருகே உள்ள நீர்நிலைகளில் தேன்கொட்ட, மீன் இனங்கள் மோதச் செழுமையான தாமரைப் பூக்கள் இதழ் விரியும் திருவையாறு ஆம்.

பாட்டு எண். 17

முதல் திருமுறை (தேவாரம்)

ஊன்பாயும் முடைதலைகொண்டு
ஊர்ஊரின் பலிக்குஉழல்வர் ;
உமையாள் பங்கர் ;

தான்பாயும் விடைஏறும்
சங்கரனர் ; தழல்உருவர் ;
தங்கும் கோயில்?

மான்பாய வயல்அருகே
மரம்ஏறி மந்திபாய்
மடுக்கள் தோறும்

தேன்பாய, மீன்பாயச்
செழுங்கமலம் மொட்டுஅலரும்
திருவை யாறே.

— சம்பந்தர்.

## 18-ஆவது பாட்டின் பொருள்

முன்னம் நீ செய்த நல்வினையின் பயனால், பெரிய, கடல்சூழ்ந்த நிலஉலகத்து, நிறைந்த மணிகளாகிய முத்துக்கள் நிலை பெற்று விளங்கும் காவிரி சூழ்ந்த திருவலஞ் சுழித் தலத்து வாழும் கடவுளை வாய் நிறைய வழுத்தி, விரும்பி, ஏத்திப் பாடி வணங்கும் அதனாலே, நீ என்ன புண்ணியம் செய்தாய் மனமே!

பாட்டு எண். 18

இரண்டாம் திருமுறை (தேவாரம்)

என்ன புண்ணியம் செய்தனை
நெஞ்சமே! இருங்கடல் வையத்து
முன்னம்நீபுரி நல்வினைப்
பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும்
பாடியும் வழிபடும் அதனாலே.

— சம்பந்தர்.

## 19-ஆவது பாட்டின் பொருள்

அன்பு கொண்டு, உருகி, கண்களில் நீர்பெருக்கி, ஓயாது ஓதுகின்றவர்களை நல்லவழிக்குச் செலுத்துவது;

நான்கு மறைகளினும் நவிலப்பெற்ற உண்மைப் பொருளாவது;

இறைவன் திருப்பெயர்;

அதுதான் “நமச்சிவாய” என்பது.

பாட்டு எண். 19 .

மூன்றும் திருமுறை (தேவாரம்)

காத லாகி,
கசிந்து,கண் நீர்மல்கி,

ஓது வார்தமை
நன்னெறிக்கு உய்ப்பது;

வேதம் நான்கினும்
மெய்ப்பொருள் ஆவது;

நாதன் நாமம்,
நமச்சி வாயவே.

— சம்பந்தர்.

## 20-ஆவது பாட்டின் பொருள்

தாயின் வயிற்றில் கருவாகக் கிடந்தபோதே உன் திருவடியையே கருதும் எண்ணமுடையேன்.

நான் உருப்பெற்ற பின்பு உன் அருளால் உன் திருப் பெயரையே சொல்லிச் சொல்லிப் பழகினேன்.

என் அழகிய வாய் சிறப்பு அடைய "சிவாய நம" என்று சொல்லி, திருநீறு பூசிக் கொண்டேன்.

திருப் பாதிரிப் புலியூரில் எழுந்தருளியிருக்கின்ற கடவுளே! எனக்கு நீ சிவகதியைத் தருவாயாக!

சிவாயநம என்று சொல்தலால் தன் வாயை, 'திருவாய்' என்று உரைத்தார் அடக்கமே வடிவமான அடிகள்.

பாட்டு எண். 20

நான்காம் திருமுறை (தேவாரம்)

கருவாய்க் கிடந்துன் கழலே
நினையும் கருத்துடையேன்;
உருவாய்த் தெரிந்துன் தன் நாமம்
பயின்றேன் உனதருளால்;
திருவாய் பொலியச் "சிவாய
நம" என்று நீறுஅணிந்தேன்;
தருவாய், சிவகதி! நீ,பா-
-திரிப்புலி யூர்அரனே!

— அப்பர்.

## 21-ஆவது பாட்டின் பொருள்

வணங்கி, புனிதமான பூக்களை இட்டு, பாடி, நின்று, அழுது, 'விரும்பி, ஓலமிடுகின்றவர்களையும்,

நாட்களை வீணுக்கி இறைவனை ஒதுக்கித் தள்ளுகின்றவர்களையும்,

கணக்கின் கீழ் எழுதுவான் திரு இன்னம்பர்த் தலத்திலே எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான்.

இன்னம்பர் ஈசன் இரண்டு பேரேடு போட்டு வைத்திருக்கிருன். ஒன்றில் தொழுது, தூமலர் தூவி, அரற்றுகின்ற கூட்டத்தாரையும், இன்னென்றில் பொழுது போக்கிப் புறக்கணிக்கும் குழுவினரையும் அவன் எழுதி வருகின்ருன்.

பாட்டு எண். 21

ஐந்தாம் திருமுறை (தேவாரம்)

தொழுது தூமலர்
தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று
அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப்
புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு;
இன்னம்பர் ஈசனே.

— அப்பர்.

## 22-ஆவது பாட்டின் பொருள்

யார் தந்தை? யார் தாய்? யார் உடன் பிறந்தவர்? யார் மனைவி? யார் மக்கள்? யார் தாங்கள்?

வந்த விதம் என்ன? போகின்ற வழி எது? எல்லாம் மாயமாகும். இதற்குக் களிப்பு எதுவும் கொள்ள வேண்டாம்.

நல்ல மனம் உடையீர்! உங்கட்கு ஒன்று சொல்லு கின்றேன். கேளுங்கள்,

விளங்குகின்ற திங்களும், ஒளியுள்ள பாம்பும், தங்கள் பகையை மறந்து உறவாடும் சடைத் தலையையுடைய எம் தந்தையார் திருப்பெயர் “ நமச்சிவாய ” என்று இயம்பி எழுகின்றவர் பெரிய வான்உலகத்தை அடைந்து வாழலாம்.

பாட்டு எண்: 22

## ஆறும் திருமுறை (தேவாரம்)

தந்தை,யார்? தாய்,யார்?
உடன்பி றந்தார்
தாரம்,ஆர்? புத்திரர்,ஆர்?
தாம்தாம், ஆரே!

வந்தவாறு எங்ஙனே?
போமாறு ஏதோ?
மாயம்ஆம்! இதற்குஏதும்
மகிழ வேண்டாம்;

சிந்தையீர்! உமக்கொன்று
சொல்லக் கேண்மின்;
திகழ்மதியும் வாள்அரவும்
திளைக்கும் சென்னி

எந்தையார் திருநாமம்
"நமச்சி வாய"
என்றுஎழுவர்க்கு இருவிசும்பில்
இருக்க லாமே.

— அப்பர்.

## 23-ஆவது பாட்டின் பொருள்

வேண்டுவார் வேண்டுவதே ஈயும் கற்பகம் போன்றவனை, பெரிய பொன்மலையை, மன்மதனை முனிந்தவனை, நெற்றிக்கண் பெற்றவனை, சொல்லுக்குப் பொருளாவானை, மயக்கத்தைக் கெடுத்து அருளுகின்ற புனிதமான ஒளி வடிவத்தை,

திருவெண்ணெய் நல்லூர் என்னும் தலத்தில் அருமையான பழைய ஓலையைக் காட்டி, என்னை அடியனாக்கி, ஆட்கொண்ட

நல்லபதவியை, நள்ளாறு அமர்ந்தானை, அமுதத்தை, நாயனைய நான் மறந்து எதை நினைப்பேன்.

பாட்டு எண். 23

ஏழாம் திருமுறை (தேவாரம்)

கற்ப கத்தினை,
கனகமால் வரையை,
காம கோபனை,
கண்ணுத லானை,

சொற்ப தப்பொருள்,
இருள்அறுத்து அருளும்
தூய சோதியை,
வெண்ணெய்நல் லூரில்,

அற்பு தப்பழ
ஆவணம் காட்டி,
அடிய னையென்னை
ஆளது கொண்ட

நற்ப தத்தை,நள்
-ளாறனை,. அமுதை
நாயி னேன்மறந்து
என்நினைக் கேனே.

— சுந்தரர்.

## 24-ஆவது பாட்டின் பொருள்

நான்தான் தவம் செய்தேன். திருஐந்தெழுத்தை ஓதும் பேறு பெற்றேன், ஆதலினால்

தேனாக, இனிய அமுதமாக, இனிக்கின்ற சிவபெருமான், அவனாக வந்து, என்உள்ளே புகுந்து, அடியேனைக் கருணைகாட்டி ஆட்கொண்டான்.

உடம்போடு கூடிய உயிர்வாழ்க்கையைப் போக்கி, அன்றே அதனை நான் வெறுக்குமாறு செய்து என்னை ஆண்டான்.

பாட்டு எண். 24

எட்டாம் திருமுறை (திருவாசகம்)

நானேயோ தவம்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்;
தேனாய்இன் அமுதமுமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்,
தானேவந்து, எனதுஉள்ளம்
புகுந்து,அடியேற்குஅருள் செய்தான்;
ஊன்ஆரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்துஅன்றே வெறுத்திடவே.

— மணிவாசகர்.

## 25-ஆவது பாட்டின் பொருள்

கரைகடக்காத, சிறந்த நீர்வளம் வாய்ந்த தில்லை நகரில் உள்ள திருச்சிற்றம்பலத்தும், என் உள்ளத்துள்ளும் தங்கியிருக்கும் சிவபெருமானால்,

உயர்ந்த மதில் கொண்ட மதுரைமா நகரத்திலே ஆராயப்பெற்ற ஒளியுள்ள இனிக்கும் தமிழின் அக வழிகளில் புகுந்துவிட்டாயோ? அல்லாமல்,

ஏழிசைக் கூட்டத்துள் நுழைந்தனையோ?

தலைவனே! பெரியமலை போன்ற உன் தோள்களுக்கு என்ன வந்துவிட்டது? (தோள்கள் இளைத்துப் போய்விட்டனவே)

காரணம்; தமிழ் அகத்துறை நுழைவா? ஏழிசைச் சூழலா?

பாட்டு எண். 25

எட்டாம் திருமுறை (திருக்கோவையார்)

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்-
-பலத்தும், என் சிந்தைஉள்ளும்

உறைவான், உயர்மதில் கூடலின்
ஆய்ந்தஒண் தீந்தமிழின்

துறைவாய் நுழைந்தனையோ? அன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ?

இறைவா! தடவரைத் தோட்குஎன்கொ-
-லாம்புகுந்து எய்தியதே.

— மணிவாசகர்.

## 27-ஆவது பாட்டின் பொருள்

நல்ல சொற்களைக் கையாண்ட மறைகளின் பொருளை ஆராய்ந்த தூய்மையான உள்ளம் கொண்ட தொண்டர்களே !

சில ஆண்டில் அழிந்துபோகும் சில தேவர்களின் சிறிய வழியில் செல்லாமல்,

தங்கமயமான மேருமலையை வில்லாகக் கொண்டவனும் எவராலும் உண்டாக்கப்படாதவனும், விடையைச் செலுத்துகின்றவனும்,

பல்லாண்டு என்னும் பதவிகளைக் கடந்தவனும் ஆகிய சிவபெருமானுக்கே, பல்லாண்டு கூறுவோம்.

பாட்டு எண். 27

ஒன்பதாம் திருமுறை (திருப்பல்லாண்டு)

சொல்லாண்ட சுருதிப்
பொருள்சோ தித்த
தூய்மனத் தொண்டர்உள்ளீர்!

சில்ஆண் டிற்சிதை-
யும்சில தேவர்
சிறுநெறி சேராமே,

வில்ஆண் டகன-
-கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்

பல்லாண்டு என்னும்
பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்.

## 27-ஆவது பாட்டின் பொருள்

நல்ல சொற்களைக் கையாண்ட மறைகளின் பொருளை ஆராய்ந்த தூய்மையான உள்ளம் கொண்ட தொண்டர்களே !

சில ஆண்டில் அழிந்துபோகும் சில தேவர்களின் சிறிய வழியில் செல்லாமல்,

தங்கமயமான மேருமலையை வில்லாகக் கொண்டவனும் எவராலும் உண்டாக்கப்படாதவனும், விடையைச் செலுத்துகின்றவனும்,

பல்லாண்டு என்னும் பதவிகளைக் கடந்தவனும் ஆகிய சிவபெருமானுக்கே, பல்லாண்டு கூறுவோம்.

பாட்டு எண். 27

ஒன்பதாம் திருமுறை (திருப்பல்லாண்டு)

சொல்லாண்ட சுருதிப்
பொருள்சோ தித்த
தூய்மனத் தொண்டர்உள்ளீர்!

சில்ஆண் டிற்சிதை-
யும்சில தேவர்
சிறுநெறி சேராமே,

வில்ஆண் டகன-
-கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்

பல்லாண்டு என்னும்
பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்.

## 28-ஆவது பாட்டின் பொருள்

‘‘சிவ, சிவ’’ என்று சொல்ல மாட்டார் தீவினை உடையார்.

‘‘சிவ. சிவ’’ என்று சொன்னால் தீவினை அழியும்.

‘‘சிவ, சிவ’’ என்று சொல்பவர் தேவராகவே ஆகி விடுவர்.

‘‘சிவ, சிவ’’ என்று சொன்னால் சிவகதி கிடைக்கும்.

பாட்டு எண். 28

பத்தாம் திருமுறை (திருமந்திரம்)

சிவசிவ என்கிலர்
தீவினை யாளர்;

சிவசிவ என்றிடத்
தீவினை மாளும்;

சிவசிவ என்றிடத்
தேவரும் ஆவர்;

சிவசிவ என்னச்
சிவகதி தானே.

— திருமூலர்.

## 29-ஆவது பாட்டின் பொருள்

நானே தவம் உடையவனாவேன்.

என் உள்ளமே நல்ல உள்ளம்.

நானே பிறவியை அறுக்க நினைத்தேன்.

அந்த யானையை உரித்துத் தோலைப் போர்த்துக் கொண்ட, நெற்றிக்கண் படைத்த, வெண்ணீறு அணிந்த தலைவனுக்கு நானே ஆளாயினேன்.

பாட்டு எண். 29

பதினோராம் திருமுறை (அற்புதத்திருஅந்தாதி)

யானே தவம்உடையேன் ;
என்நெஞ்சே நல்நெஞ்சம் ;
யானே பிறப்பறுப்பான்
எண்ணினேன் — யானே, அக்
கைம்மா உரிபோர்த்த
கண்ணுதலான் வெண்நீற்ற
அம்மானுக்கு ஆளாயி னேன்.

— காரைக்கால் அம்மையார்.

## 30-ஆவது பாட்டின் பொருள்

தெளிந்த நிலவு அரும்பும் சடைமுடியை உடைய வனே! உன் திருநடத்தை வணங்கும் பேறு பெற்று, அதனால்

இவ்உலகத்தில் எடுத்த பிறப்பு எனக்குச் சிறந்த இன்பத்தைத் தருவது என்று கருதி,

கண்களினின்றும் மகிழ்ச்சி நீர்ப்பெருக்கு அருவி போல் கொட்ட, பூப் போன்ற கையைத் தலையின் மேல் சேர்த்து,

பண்களால் உயர்ந்த அரிதற்கு அரிய தமிழ்ப் பாக்களைப் பாடினார்; ஏத்தினார்; கும்பிட்டார். (சுந்தரர்)

பாட்டு எண். 30

பன்னிரண்டாம் திருமுறை (பெரியபுராணம்)

தெண்ணிலா மலர்ந்த வேணியாய்! உன்தன்
திருநடம் கும்பிடப் பெற்று,

மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று,

கண்ணில்ஆ னந்தஅருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேல் குவித்துப்

பண்ணினல் நீடி அறிவரும் பதிகம்
பாடினர்; பரவினர்; பணிந்தார்.

— சேக்கிழார்.

## 31-ஆவது பாட்டின் பொருள்

கபம் அணுகி, கண்கள் மூடி, உணர்வு இழந்து, உடலும் 'பொய்' என்று சொல்லும்படி, உடம்பை உயிர் விடும்போது, உன்னை நான் ஒன்று கேட்பேன்.

அருள் செய்யும் திருஒற்றியூரில் அமர்ந்த கடவுளே! (அப்போது)

திருநீறு அணிந்து, உம்மைக் கைகுவிக்கச் செய்து, "சிவாய நம" என்று சொல்ல அருள் வீராக!

ஐ : கபம்; அதாவது கோழை. இறுதிக்காலத்தில் கபம் வந்து தொண்டையை அடைக்கும். "ஐயினால் மிடறு அடைப்புண்டு ஆக்கைவிட்டு ஆவியார் போவதுமே" என்றார் அப்பர் அடிகள்.

பாட்டு எண். 31

பட்டினத்தார் பாடல்

ஐயும் தொடர்ந்து, விழியும்
செருகி, அறிவழிந்து,

மெய்யும் பொய்யாகி, விடுகின்ற
போதுஒன்று வேண்டுவன் யான் ;

செய்யும் திருஒற்றி ஊருடை
யீர் !திரு நீறும்இட்டுக்

கையும் தொழப்பண்ணி, ஐந்தெழுத்து
ஓதவும் கற்பியுமே.

— பட்டினத்தார்.

## 32-ஆவது பாட்டின் பொருள்

புனிதமான மழுப்படையையும், மானையும் தூக்கியவனே! முத்தலைச் சூலத்தை ஏந்தியவனே!

பிறைசூடிய செவ்விய சடையை உடையவனே! இடபத்தில் ஏறுகின்றவனே!

மாது ஒரு கூறு உடையவனே! சிவந்த கண்கள் கொண்ட பாம்புகளை அணிந்தவனே!

என் தலையின்மீது திருவடி வைத்தவனே! நீயே எனக்குப் புகலிடம் ஆவாய்.

பாட்டு எண். 32

தாயுமானுர் பாடல்

துங்கமழு மானுடையாய்!
சூலப் படையுடையாய்!
திங்களணி செஞ்சடையாய்!
சேவுடையாய் — மங்கைஒரு
பாலுடையாய்! செங்கண்
பணியாய்! என் சென்னியின்மேல்
காலுடையாய்! நீயே கதி.

— தாயுமானுர்.

## 33-ஆவது பாட்டின் பொருள்

"பயப்படாதே!" என்று காட்டும் கையும், கூட்டமான பாம்புக் காப்பும், இடைக்கு ஏற்ற புலித்தோல் ஆடையும், திங்கள் அணிந்த சிவந்த சடையும், தாமரைப் பூப்போன்ற செம்மையான திருவடியும், ஒலிக்கின்ற வீரகண்டாமணியும், நூபுரமும், அருள்ஒழுகும் திருமுகமும், ஒப்பற்ற மூன்று கண்களும், விடத்தை அருந்திய அழகிய கழுத்தும், பூநூலும், அந்நூல் அணிந்த மார்பும், நன்மை பெருகு திருநீற்றின் ஒளியும், மான் குட்டியும், மழுப்படையும், செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய திருவடியையும், சிறிய இடையையும் உடைய ஒப்பனை ஆகிய உமையவள் ஒருபாகமுமாய்ப் பால்வண்ணநாதர் உள்ளத்துள்ளே இருக்கும்போது, நமக்கு அச்சம் ஏது?

ஒப்பனை : திருக்கருவைத்தல அம்பிகையின் பெயர். பால்வண்ணநாதர் அத்தல இறைவன் பெயர்.

பாட்டு எண். 33

தனிப் பாடல்

அஞ்சலென்ற கரதலமும்,
கணபணக்கங் கணமும்,
அரைக்கிசைந்த புலிஉடையும்,
அம்புலிச்செஞ் சடையும்,
கஞ்சமலர்ச் சேவடியும்,
கனைகழலும், சிலம்பும்,
கருணைபொழி திருமுகமும்,
கண்களொரு மூன்றும்,
நஞ்சைஉண்ட மணிமிடறும்,
முந்நூலும், மார்பும்,
நலம்திகழ்வெண் நீற்றொளியும்,
மறிமானும், மழுவும்,
பஞ்சடிச்சிற் றிடைஉமையாள்
ஒப்பனைபா கமுமாய்ப்
பால்வண்ணன் உளத்திருக்கப்
பயமுண்டோ எமக்கே?

— வரதுங்கராமபாண்டியன்.

### 34-ஆவது பாட்டின் பொருள்

திருப்பெருந்துறையிலே சிவபெருமான் திருவருள் சுரந்தவுடன், அப்பெருமான் பெருங்கருணைப் பேற்றை எண்ணி, உருகி, உருகி இரு கண்களும் நீரை மழைபோல் கொட்ட, மேலான நிலையைக் கடந்து, அதற்கு மேலும் வந்து, திருந்திய பெரிய சிவபோகம் என்னும் கொழு கொழுத்த தேனைக் குடித்து, அதனால் தேக்கு எறிந்து, இறுமாந்து, இருந்து அருளும் பெரிய புகழ்வாய்ந்த திருவாதவூர் அடிகளாகிய மணிவாசகப் பெருமானின் இரண்டு திருவடிகளுக்கும் வணக்கம்.

பாட்டு எண். 34

# மணிவாசகர் வணக்கம்

காஞ்சிப்புராணம்

பெருந்துறையில் சிவபெருமான்
அருளுதலும் பெருங்கருணைப்
பெற்றி நோக்கி,

கரைந்துகரைந்து இருகண்ணீர்
மழைவாரத் துரிய நிலை
கடந்து போந்து,

திருந்துபெரும் சிவபோகக்
கொழுந்தேறல் வாய்மடுத்துத்
தேக்கிச் செம்மாந்து,

இருந்துஅருளும் பெருங்கீர்த்தி
வாதவூர் அடிகள் அடி
இணைகள் போற்றி!

— சிவஞானசுவாமி.

## 35-ஆவது பாட்டின் பொருள்

செல்லுகின்ற இடத்துக்கு வழிகாட்டுபவராக அமைவார். சிவந்த உடம்பில் திருநீறு அணிந்தவர்.

சிவாகம நூலின் வரம்பு முழுதும் கண்டு உணர்ந்தவர். அக்கமணிமாலை பூண்டவர்.

திருஐந்து எழுத்தையே ஓதும் நாஉடையார்.

தில்லைத் தலத்திலே கூத்தாடுகின்ற சிவந்த அடியையே வருடும் நல்ல உள்ளம் உடையவர்.

சிறப்பு நிறைந்த நல்லறிவு பெற்றவர்.

எங்களை ஆட்கொள்ளும் ஈசான சிவாச்சாரிய சுவாமிகளின் திருவடித் தாமரைகளுக்கு வணக்கம்.

பாட்டு எண். 35

## குரு வணக்கம்

செல்கதிக்கு வழியாவார் :
செம்மேனி வெண்ணீற்றார் :
சிவாகமத்தின்

எல்லையெலாம் கண்டுணர்ந்தார் ;
கண்டிகையார் ; அஞ்செழுத்தே
இசைக்கும் நாவார் ;

தில்லையிலே ஆடுகின்ற
சேவடியே தைவருநல்
நெஞ்சர் ; சீர்சால்

நல்லறிஞர் ; எமைஆளும்
ஈசான ஞானகுரு
நளினம் போற்றி !

— ராய. சொ.

## 36-ஆவது பாட்டின் பொருள்

சிறந்த மேகம் தவறாது பொழிக!

நிறைந்த வளம் பெருக!

அரசனின் செங்கோல் முறையாக அரசு புரிக!

குறைவின்றி உயிர் அனைத்தும் வாழ்க!

நான்கு மறைகளிலும் நவிலப்பட்ட அறங்கள் வளர்க!

நல்ல தவமும், வேள்வியும் நிறைக!

மேலான சைவ நீதி உலகம் முழுதும் விளங்கித் தோன்றுக!

பாட்டு எண். 36

# வாழ்த்து

**கந்தபுராணம்**

வான்முகில் வழாது பெய்க!
மலிவளம் சுரக்க! மன்னன்

கோல்முறை அரசு செய்க!
குறைவிலாது உயிர்கள் வாழ்க!

நான்மறை அறங்கள் ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க!

மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக! உலகம் எல்லாம்.

— **கச்சியப்பர்.**

## 37-ஆவது பாட்டின் பொருள்

கையாகிய பூவினால் பூக்களை இட்டு, அன்பு கொண்டு அமரர்கள் மூன்று பொழுதும் முடி தாழ்த்தி வணங்க நின்ற முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை,

நீராட்டி, பூ இட்டு,

ஐம்பொறிகளையும் உள்ளத்துள்ளே அடக்கிக் கொண்டு,

எந்தக்காலத்தும் இனிக்கின்றவனான அக் கடவுளை என் மனத்துள்ளே இருத்திக் கொண்டேன்.

அப்பு : நீர்.

பாட்டு எண். 37

## சுவாமியை உட்கொள்ளுதல்

**தேவாரம்**

கைப்போது மலர்தூவிக்
காதலித்து வானோர்கள்

முப்போதும் முடிசாய்த்துத்
தொழநின்ற முதல்வனை,

அப்போது மலர்தூவி
ஐம்புலனும் அகத்துஅடக்கி

எப்போதும் இனியானை
என்மனத்தே வைத்தேனே.

— **அப்பர்.**

38-ஆவது பாட்டின் பொருள்

மண்ணுலகில் இருந்து வாழ்கின்ற மக்களுக்கும், சிறந்த, புனிதமான மறையவர்க்கும் விண்ணுலகில் பொருந்தி வாழும் அமரர்கட்கும், வீடு பேறு கொடுப்பவனாய் நின்ற கடவுளை,

பண் அமைய இசைத்துப்பாடும் புகழ் வாய்ந்த திருப்பழனம் என்னும் தலத்தில் அமர்ந்த அப்பனாகிய சிவபெருமானை,

என் கண் மூடும் பொழுதும் நான் கைவிட்டு விடுவேனா? (மாட்டேன்)

கண்பொருந்துதல்: உறங்குதல், சாதல் இரண்டுக்கும் பொருந்தும்.

பாட்டு எண். 38

# ஒடுக்கம்

தேவாரம்

மண்பொருந்தி வாழ்பவர்க்கும்
மாதீர்த்த வேதியர்க்கும்

விண்பொருந்து தேவர்க்கும்
வீடுபேறாய் நின்றானை,

பண்பொருந்த இசைபாடும்
பழனம்சேர் அப்பனைஎன்

கண்பொருந்தும் போதத்தும்
கைவிட நான் கடவேனோ?

— அப்பர்.

## 39-ஆவது பாட்டின் பொருள்

விண்ணுலகமும், மண்ணுலகமும் வாழ்வதாக!

மறைகள் வாழ்க!

பண்பு அமைந்த, சிறந்த தமிழ் உலகத்து விளங்கித் தோன்றுக!

(அதன் பொருட்டு)

அறிவாகிய மதத்தைப் பொழியும் ஐந்து கைகளும், மூன்றுகண்களும், தொங்குகின்ற வாயும், யானைமுகமும் கொண்ட கடவுளைப் போற்றி வணங்குவோம்.

பாட்டு எண். 39

# ஆனைமுகன் அஞ்சலி

**சேக்கிழார் புராணம்**

வானுலகும் மண்ணுலகும்
வாழ!மறை வாழ!

பான்மைதரு செய்யதமிழ்
பார்மிசை விளங்க!

ஞானமத ஐந்துகர
மூன்றுவிழி நால்வாய்

ஆனைமுக னைப்பரவி
அஞ்சலிசெய் கிற்பாம்.

— **உமாபதிசிவம்.**

## 40-ஆவது பாட்டின் பொருள்

குளிர்ந்த மழையை மேகங்கள் கொட்டுக!

நாடு முழுதும் பயிர்கள் விளைக!

திரு உயர்க!

மகளிர் கூட்டமும், மக்கள் குழுவும், மனை அறங்களுடன் விளங்கி, நிறைந்த வாழ்வு பெறுக!

மேன்மை சான்ற, சிறந்த சைவ வழியும், மறை வழியும் கிளைத்துப் பெருகுக!

நில உலகத்தில் சிவபெருமானின் திருக்கோயில்களும், பூசை வழிபாடுகளும் மேலும் மேலும் பொலிவடைக!

பாட்டு எண் 40

# வாழ்த்து

திருக்குற்றாலப்புராணம்

சீதமழை முகில்பொழிக! தேசமெலாம்
பயிர்விளைக! செல்வம் ஓங்க!

மாதர்குழாம் மக்கள்குழாம் மனை அறங்கள்
உடன்பொழிந்து மலிந்து வாழ்க!

மேதகுசீர்ச் சைவநெறி வேதநெறி
தழைத்துஓங்க! மேலும் மேலும்

பூதலமேல் சிவபெருமான் ஆலயங்கள்
பூசனைகள் பொலிக மாதோ!

— திரிகூடராசப்பகவி.

# பாட்டு முதற்குறிப்பு அகராதி


| தொடர் எண். | பாட்டு முதல் | | பாடல் எண். | தொடர் எண். | பாட்டு முதல் | | பாடல் எண். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அஞ்சல் என்ற | | 33 | 21 | சொல்லாண்ட | * | 27 |
| 2 | அருளாது | | 2 | 22 | தந்தையார் | | 22 |
| 3 | இழித்தனன் | | 11 | 23 | தரிக்கிலேன் | | 6 |
| 4 | ஊன்பாயும் | | 17 | 24 | திருவாக்கும் | * | 1 |
| 5 | எம்பிரான் | * | 12 | 25 | தில்லைவாழ் | | 4 |
| 6 | என்ன புண்ணியம் | | 18 | 26 | தீர்ந்த அன்பாய | | 14 |
| 7 | ஐயும் தொடர்ந்து | | 31 | 27 | துங்கமமு | * | 32 |
| 8 | ஒருவனே | | 13 | 28 | தெண்ணிலா | | 30 |
| 9 | கடவுளே | | 9 | 29 | தொழுது | | 21 |
| 10 | கடையவனேனை | | 16 | 30 | நானேயோ | | 24 |
| 11 | கருவாய் | * | 20 | 31 | பத்தியாய் | | 26 |
| 12 | கற்பகத்தினை | | 23 | 32 | பூழியர்கோன் | | 3 |
| 13 | காதலாகி | | 19 | 33 | பெருந்துறையில் | | 34 |
| 14 | கைப்போது | | 37 | 34 | போற்றிஇப் | | 15 |
| 15 | சங்கரா | | 10 | 35 | போற்றிஎன் | | 8 |
| 16 | சிவக்கடலில் | | 5 | 36 | போற்றியோ | | 7 |
| 17 | சிவசிவ | | 28 | 37 | மண்பொருந்தி | | 38 |
| 18 | சிறைவான் | | 25 | 38 | யானேதவம் | | 29 |
| 19 | சீதைமழை | * | 40 | 39 | வானுலகும் | | 39 |
| 20 | செல்கதிக்கு | | 35 | 40 | வான்முகில் | | 36 |


* இவை தெய்வப் பாமாலையிலும் இடம் பெற்றுள்ளன.

உ

சிவமயம்

# தெய்வப் பாமாலை

## நூல் முகம்

நூற்றி ஒரு தெய்வ மணம் கமழும் வாடாமலர் கொண்டு தொடுக்கப்பெற்ற மணமாலை இது. இவ் அரிய நூல், முன்னை நாள்முதல் இன்றுவரை அருள் பெற்ற செல்வர் பலராலும் கடவுள் திருவடிகளில் சாத்தப்பெற்ற பூக்களைப் பொறுக்கி எழில்பெற இணைத்த ஓர் பாமாலை.

சிவனுக்கு ௪0-பாக்களும் திருமாலுக்கு ௩௨-பாசுரங்களும் முருகனுக்கு ௧0-பாடல்களும்விநாயகருக்கு ௩-பாட்டுகளும் கலைமகள், உமையவள் திருமகள் ஆகியவர்க்கு முறையே ௩-௨-௧, கவிகளும் பாரத மாதாவுக்கு ஒரு பாவும் எந்தக் கடவுள் பெயரும் குறிப்பிடாத பொதுச் செய்யுட்கள் ௬-ம்

ஆக, கoக பாக்களின் தொகுப்பு நூல் இது. இந்நூல் சைவ வைணவ வேறுபாடு இன்றி, சிவனையும் திருமாலையும் பின்னிப் பிணைக்கிறது.

கடவுளைப்பற்றிப் பேசும் நூல்கள் எல்லாவற்றி-லும் தலைசிறந்த நூலாகிய திருவாசகமே இந்நூலைப் பெரிதும் அலங்கரிக்கிறது. நூற்றி ஒரு மணிகளில் கச-மணிகள் திருவாசகத்தினின்றும் பொறுக்கிப் பதிக்கப் பெற்றவை. மொத்தம் இந்நூலை அழகு படுத்தும் ஆசிரியர் நாற்பத்திருவர்; நூல்களின் எண்ணிக்கை இருபத்தேழு. நூற்றி ஒரு பாக்களில் கடவுளோடு நேராகப் பேசும்பாடல்கள், எ௩.எஞ்சிய உஅ-பாக்கள் படர்க்கைப் பாடல்கள். இப்பொறுக்கு மணிகளை மனத்தில் பதித்து யாவரும் மகிழ வேண்டும் என்பதே இந்நூல் வெளியீட்டின் கருத்து. நன்ருகப்படித்து உணர்வதற்காகச் சொற்கள் பிரித்து அச்சிடப் பெற்றிருக்கின்றன.

— ராய. சொ.

# தெய்வப் பாமாலை

உ

சிவமயம்

ஐந்து கரத்தனை
யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை
போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை
ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி
போற்றுகின் றேனே.

— திருமூலர்.

2

அம்மையே! அப்பா! ஒப்புஇலா மணியே!
அன்பினில் விளைந்தஆர் அமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு மானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்,
எங்குஎழுந்து அருளுவது இனியே.

— மணிவாசகர்

3

ஆரா அமுதே! அடியேன்
உடலம் நின்பால் அன்பாயே
நீராய் அலைந்து கரைய
உருக்கு கின்ற நெடுமாலே!
சீர் ஆர் செந்நெல் கவரி
வீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏர் ஆர்கோலம் திகழக்
கிடந்தாய்! கண்டேன் எம்மானே!

— நம்மாழ்வார்

4

காக்கக் கடவியநீ,
காவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம்
அறுமுகவா!— பூக்கும்
கடம்பா! முருகா!
கதிர்வேலா! நல்ல
இடங்காண் இரங்காய் இனி,

— நக்கீரர்

5

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி!
உத்தரியத் தொடித்தோள் போற்றி!
கரும்புருவச் சிலைபோற்றி! கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி!
இரும்புமனம் குழைத்து,என்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பி ராட்டி!
அரும்பும்இள நகைபோற்றி! ஆரண நூ
புரம்சிலம்பும் அடிகள் போற்றி!

— பரஞ்சோதிமுனிவர்.

6

கமலம் மேவு திருவே!—நின்மேல்
காதல் ஆகி நின்றேன்.
குமரி! நின்னை இங்கே—பெற்றோர்
கோடி இன்பம் உற்றார்.
அமரர் போல வாழ்வேன்—என்மேல்
அன்பு கொள்வை ஆயின்,
இமய வெற்பின் மோத—நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன்.

— பாரதியார்.

7

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள் அமுது
ஆர்ந்துஉன் அருட்கடலில்
குளிக்கும் படிக்குஎன்று கூடுங்கொ
லோ? உளம் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே!
சகல கலாவல்லியே!

— குமரகுருபரர்.

8

சருவாய்க் கிடந்துஉன் கழலே
நினையும் கருத்துஉடையேன்;
உருவாய்த் தெரிந்துஉன்தன் நாமம்
பயின்றேன் உனதுஅருளால்;
திருவாய் பொலியச் "சிவாய
நம" என்று நீறுஅணிந்தேன்;
தருவாய், சிவகதி நீ,பா
திரிப்புலி யூர்அரனே!

— அப்பர்.

9

ஊன் இடைச் சுவர் வைத்து என்பு தூண் நாட்டி
உரோமம்மேய்ந்து ஒன்பது வாசல்
தான் உடைக் குரம்பை பிரியும்போது உன் தன்
சரணமே சரணம்என்று இருந்தேன்;
தேன் உடைக் கமலத் திருவினுக்கு அரசே!
திரைகொள்மா நெடுங்கடல் கிடந்தாய்!
நான் உடைத் தவத்தால் திருவடி அடைந்தேன்;
நைமிசா ரணியத்துள் எந்தாய்!

— திருமங்கையாழ்வார்.

10

நீர்கொண்ட சடைமுடிமேல்
நீள்மதியம் பாம்பிேனாடும்
ஏர்கொண்ட கொன்றையிேனாடு
எழில்மத்தம் இலங்கவே
சீர்கொண்ட மாளிகைமேல்
சேயிழையார் வாழ்த்துரைப்பக்
கார்கொண்ட வேணுபுரம்
பதியாகக் கலந்தீரே!

— சம்பந்தர்.

## 11

மாணிக்கம் கட்டி
  வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன் னால்செய்த
  வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப்
  பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே! தாலேலோ!
  வையம் அளந்தானே! தாலேலோ!

— பெரியாழ்வார்.

## 12

கண் ஆய் ஏழுலகும்
  கருத்து ஆய அருத்தமுமாய்,
பண் ஆர் இன் தமிழாய்ப்
  பரம்ஆய பரஞ்சுடரே!
மண் ஆர் பூம்பொழில்சூழ்
  மழபாடியுள் மாணிக்கமே!
அண்ணா நின்னையல்லால்
  இனியாரை நினைக்கேனே!

— சுந்தரர்.

## 13

செடியாய வல்வினைகள்
   தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா!
   நின்கோவி லின்வாசல்
அடியாரும் வானவரும்
   அரம்பையரும் கிடந்துஇயங்கும்
படியாய்க் கிடந்துஉன்
   பவளவாய் காண்பேனே.

— குலசேகராழ்வார்.

## 14

மண்ணும் தணல்ஆற
   வானும் புகைஆற
எண்அரிய தாயும்
   இளைப்புஆறப்-பண்ணும்அயன்
கையாற வும்அடியேன்
   கால்ஆற வும்கண்பார்
ஐயா! திருவையா று!

— பட்டினத்தார்.

## 15

இதுஎன் புகுந்ததுஇங்கு அந்தோ !
இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய் !
மதுவின் துழாய்முடி மாலே!
மாய னே !எங்கள் அமுதே !
விதியின்மை யால்அது மாட்டோம் ;
வித்தகப் பிள்ளாய் ! விரையேல் !
குதிகொண்டு அரவில் நடித்தாய் !
குருந்திடைக் கூறை பணியாய் !

— ஆண்டாள்.

## 16

அன்றும் திருஉருவம்
காணாதே ஆட்பட்டேன் ;
இன்றும் திருஉருவம்
காண்கிலேன் ;—என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான்
என்பார்கட்கு என்உரைக்கேன் ;
எவ்உருவோ நின்உருவம் ஏது !

— காரைக்கால் அம்மையார்.

17

நின்றதுஎந்தை ஊரகத்து,
இருந்ததுஎந்தை பாடகத்து,
அன்றுவெஃ கணைக்கிடந்தது,
என்இலாத முன்எலாம்;
அன்றுநான் பிறந்திலேன்;
பிறந்தபின் மறந்திலேன்;
நின்றதும் இருந்ததும்
கிடந்ததும்என் நெஞ்சுளே.

— திருமழிசையாழ்வார்.

18

ஒளிவளர் விளக்கே! உலப்புஇலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததுஓர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடுஅரங்கு ஆக,
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

— திருமாளிகைத்தேவர்.

## 19

மனத்தில்ஓர் தூய்மை இல்லை ;
வாயில்ஓர் இன்சொல் இல்லை ;
சினத்தினால் செற்றம் நோக்கித்
தீவிளி விளிவன் வாளா !
புனத்துழாய் மாலை யானே !
பொன்னிசூழ் திருவ ரங்கா !
எனக்குஇனிக் கதிஎன் சொல்லாய் !
என்னை ஆ ளுடைய கோவே !

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

## 20

என்னைஉன் பாத பங்கயம் பணிவித்து
என்பெலாம் உருகநீ எளிவந்து
உன்னைஎன் பால்வைத்து எங்கும்எஞ் ஞான்றும்
ஒழிவுஅற நிறைந்தஒண் சுடரே !
முன்னைஎன் பாசம் முழுவதும் அகல
முகத்தலை அகத்துஅமர்ந்து எனக்கே
கன்னலும் பாலும் தேனும்ஆர் அமுதும்
கனியுமாய் இனியையா யினையே !

— கருவூர்த்தேவர்.

## 21

கொண்டல் வண்ணனைக்
　　கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன்என்
　　உள்ளம் கவர்ந்தானை
அண்டர் - கோன் அணி
　　அரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்று
　　ஒன்றினைக் காணாவே

— திருப்பாணாழ்வார்.

## 22

துங்கமழு மான் உடையாய்!
　சூலப் படைஉடையாய்!
திங்கள் அணி செஞ்சடையாய்!
　சேஉடையாய்!—மங்கைஒரு
பால்உடையாய்! செங்கண்
　பணியாய்!என் சென்னியின்மேல்
கால்உடையாய்! நீயே கதி!

— தாயுமானார்.

## 2

வையம் தகளியா
வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன்
விளக்காக—செய்ய
சுடராழி யான்அடிக்கே
சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று.

— பொய்கையாழ்வார்.

## 24

அப்புஅணி சடைஎன் அப்பனே! மன்றில்
ஆனந்த நடம்புரி அரசே!
இப்புவி தனிலே அறிவுவந் ததுதொட்டு
இந்தநாள் வரையும்என் தனக்கே
எப்பணி இட்டாய், அப்பணி அலதுஎன்
இச்சையால் புரிந்ததுஒன்று இலையே!
செப்புவதுஎன், நான் செய்தவை எல்லாம்
திருவுளம் அறியுமே எந்தாய்!

— இராமலிங்க சுவாமிகள்.

## 25

தாழ்சடையும் நீள்முடியும்
ஒண்மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன் நாணும்
தோன்றுமால்!—சூழும்
திரண்டு அருவி பாயும்
திருமலைமேல் எந்தைக்கு
இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து.

— பேயாழ்வார்.

## 26

சங்குளைந்தும் மலர்க்குடங்கைப் புத்தேளும்
மறைக்கோவும் தழல்கால் சூலம்
அங்குளைந்தும் அம்மானும் தத்தமது
தொழில்தலை நின்று ஆற்றச் செய்துஓர்
பங்குளைந்தும் பெருமாட்டி விழிகளிப்ப
இருமுனிவர் பணிந்து போற்றக்
கொங்குளைந்தும் மணிமன்றுள் குனித்தருளும்
பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்.

— சிவஞானயோகிகள்.

## 27

யானே தவம்செய்தேன் ;
ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவம்உடையேன் ;
எம்பெருமான் !—யானே
இருந்தமிழ்நன் மாலை
இணைஅடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது.

—பூதத்தாழ்வார்.

## 28

என்பும் தழுவிய ஊனும்
நெகஅக மேஎழுந்த
அன்பின் வழிவந்த ஆர்அமு
தே ! அடி யேன்உரைத்த
வன்புன் மொழிகள் பொறுத்திகொ
லாம்வளர் தில்லைதன்னுள்
மின்புன் மிளிர்சடை வீசிநின்று
ஆடிய விண்ணவனே !

— நம்பியாண்டார் நம்பி

29

உலகம் யாவையும்
தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும்
நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை
யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க்
கேசரண் நாங்களே.

— கம்பர்.

30

உலகெ லாம்உணர்ந்து
ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய
நீர்மலி வேணியன்
அலகில் சோதியன்
அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்பு அடி
வாழ்த்தி வணங்குவாம்.

— சேக்கிழார்.

## 31

முன்னம் பிறந்த
பிறப்போ முடிவுஇல்லை ;
இன்னம் பிறப்பிக்க
எண்ணுதே ! — தென் அரங்கம்
மேவிக் கிடந்தானே !
வீற்றிருக்கும் நின்பதத்துஎன்
ஆவிக்கு இடந்தான் அருள்.

— பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

## 32

திருவாக்கும் ; செய்கருமம்
கைகூட்டும் ; செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்
பெருக்கும் ; — உருவாக்கும் ;
ஆதலால் வானோரும்
ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

– கபிலதேவர்.

## 33

படிக்கும் திருப்புகழ் போற்றுவன் ;
கூற்றுவன் பாசத்தினல்
பிடிக்கும் பொழுதுவந்து 'அஞ்சல்' என்
பாய், பெரும் பாம்பில் நின்று
நடிக்கும் பிரான்மருகா ! கொடும்
சூரன் நடுங்கவெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயில்
ஏறும் இராவுத்தனே !

— அருணகிரிநாதர்.

## 34

மடம்தாழும் நெஞ்சத்துக்
கஞ்சனுர் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால்
நால்திசையும் போற்றப்
படர்ந்துஆ ரணம்முழங்கப்
பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத
நாஎன்ன நாவே !
நாராய ணா!என்ணு
நாஎன்ன நாவே !

— இளங்கோவடிகள்.

## 35

இன் இசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன் அருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே!

— மணிவாசகர்.

## 36

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ
துடிஇடை யார்சுரி குழல்பிழிந்து உதறித்
துகில்உடுத்து ஏறினர்; சூழ்புனல் அரங்கா!
தொடைஒத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்டர் அடிப்பொடி என்னும்
அடியனை அளியன்என்று அருளிஉன் அடியார்க்கு
ஆட்படுத் தாய்! பள்ளி எழுந்துஅரு ளாயே.

— தொண்டரடிப்பொடியாழ்வார்.

## 37

நின் எழில் விழி அருள் காண்பதற்கு எங்கள்
நெஞ்சகத்து ஆவலை நீ அறி யாயோ ?
பொன் அனை யாய் ! வெண் பனிமுடி இமயப்
பொறுப்பினன் ஈந்த பெருந்தவப் பொருளே !
என்ன தவங்கள் செய்து எத்தனை காலம்
ஏங்குவம் நின் அருட்கு ஏழையம் யாமே ?
இன்னமும் துயிலுதி யேல்இது நன்றோ ?
இன் உயி ரே ! பள்ளி எழுந்தரு ளாயே ?

— பாரதியார்.

## 38

ஆதி நடம் ஆடுமலை ;
அன்று இருவர் தேடுமலை ;
சோதிமதி ஆடு அரவம்
சூடுமலை ; — நீதி
தழைக்குமலை ; ஞானத்
தபோதனரை 'வா' என்று
அழைக்குமலை அண்ணா மலை.

— குருநமச்சிவாயர்.

39

நாடிப் புலங்கள் உழுவார்
கரமும் நயஉரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர்
நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர்
நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்
பாதம் அடைக்கலமே!

— தேசிக விநாயகம் பிள்ளை.

40

தனம்தரும்; கல்வி தரும்; ஒரு
நாளும் தளர்வு அறியா
மனம்தரும்; தெய்வ வடிவும்
தரும்; நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம்தரும்; நல்லன எல்லாம்
தரும்; அன்பர் என்பவர்க்கே,
கனம்தரும் பூங்குழ லாள்அபி
ராமி கடைக்கண்களே.

— அபிராமிப்பட்டர்.

## 41

எம்பிரான்! போற்றி! வானத்து
  அவரவர் ஏறு! போற்றி!
கொம்பர்ஆர் மருங்குல் மங்கை
  கூறு!வெண் நீறு! போற்றி
செம்பிரான்! போற்றி! தில்லைத்
  திருச்சிற்றம் பலவ! போற்றி!
உம்பரா! போற்றி! என்னை
  ஆள்உடை ஒருவ! போற்றி!

— மணிவாசகர்.

## 42

அடியேன் மேவி அமர்கின்ற
  அமுதே! இமையோர் அதிபதியே!
கொடியா, அடுபுள் உடையானே!
  கோலக் கனிவாய்ப் பெருமானே!
செடியார் வினைகள் தீர்மருந்தே!
  திருவேங் கடத்துஎம் பெருமானே!
நொடியார் பொழுதும் உனபாதம்
  காண நோலாது ஆற்றேனே.

— நம்மாழ்வார்.

## 43

நற்பதத்தார் நற்பதமே! ஞான மூர்த்தி!
நலஞ்சுடரே! நால்வேதத்து அப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்குஅரிய சூழலாய்! இதுஉன் தன்மை!
நிற்பதுஒத்து நிலையிலா நெஞ்சம் தன்னுள்
நிலாவாத புலால்உடம்பே புகுந்து நின்ற
கற்பகமே! யான்உன்னை விடுவேன் அல்லேன்;
கனகமா மணிநிறத்துஎம் கடவு ளானே!

— அப்பர்.

## 44

தெரியேன் பாலக னாய்ப்பல
தீமைகள் செய்துவிட்டேன்;
பெரியேன் ஆயின பின்பிறர்க்
கேஉழைத்து ஏழையானேன்;
கரிசேர் பூம்பொழில் சூழ்கன
மாமலை வேங்கடவா!
அரியே! வந்தடைந் தேன்; அடி
யேனையாட் கொண்டுஅருளே!

— திருமங்கையாழ்வார்.

## 45

குறைவுஇ லாநிறை வே! குணக் குன்றே!
　　கூத்த னே! குழைக் காதுடை யானே!
உறவுஇ லேன்உனை அன்றிமற் றுஅடியேன்,
　　ஒருபிழைபொறுத் தால்இழிவு உண்டே?
சிறைவண்டு ஆர்பொழில் சூழ்திரு ஆரூர்ச்
　　செம்பொ னே! திரு ஆவடு துறையுள்
அறவ னே! எனை 'அஞ்சல்' என்று அருளாய்!
　　ஆர்எ னக்குறவு அமரர்கள் ஏறே!

— சுந்தரர்.

## 46

முன்ஒருநாள் மழுவாளி சிலைவாங்கி
　　அவன்தவத்தை முற்றும் செற்றாய்!
உன்னையும்உன் அருமையையும் உன்மோயின்
　　வருத்தமும்ஒன் றாகக் கொள்ளாது
என்னையும்என் மெய்உரையும் மெய்யாகக்
　　கொண்டுவனம் புக்க எந்தாய்!
நின்னையே மகனாகப் பெறப்பெறுவேன்
　　ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே.

— குலசேகராழ்வார்.

## 47

மருளனேன் மனத்தை மயக்குஅற நோக்கி
மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே! புனிதா! பொங்குவாள் அரவம்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்!
தெருளும்நான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றுஅரு ளாயே!

— மணிவாசகர்.

## 48

ஊர்இலேன்; காணி இல்லை;
உறவுமற்று ஒருவர் இல்லை;
பாரில்நின்; பாத மூலம்
பற்றிலேன்; பரம மூர்த்தி!
கார்ஒளி வண்ண னே!ஓ!!
கண்ணனே! கதறு கின்றேன்;
ஆர்உளர் களைகண் அம்மா!
அரங்கமா நகரு ளானே.

— தொண்டரடிப் பொடியாழ்வார்.

49

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி!
மேல்ஆடு புரமூன்றும் எய்தாய் போற்றி!
சீலத்தான் தென் இலங்கை மன்னன் போற்றிச்
சிலைஎடுக்க வாய்அலற வைத்தாய் போற்றி!
கோலத்தால் குறைவுஇல்லான் தன்னை அன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி!
காலத்தால் காலனையும் காய்ந்தாய் போற்றி!
கயிலை மலையானே! போற்றி! போற்றி!

— அப்பர்.

50

துப்புஉடை யாரை அடைவது எல்லாம்
சோர்வுஇடத் துத்துணை யாவர் என்றே;
ஒப்புஇலேன் ஆகிலும் நின்அடைந்தேன்,
ஆனைக்கு நீஅருள் செய்தமையால்;
எய்ப்புஎன்னை வந்து நலியும் போதுஅங்கு
ஏதும்நான் உன்னை நினைக்கமாட்டேன்;
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்;
அரங்கத்து அரவுஅணைப் பள்ளி யானே!

— பெரியாழ்வார்.

## 51

தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா! ஆர்கொலோ சதுரர்?
அந்தம்ஒன் று இல்லா ஆனந்தம் பெற்றேன்;
யாதுநீ பெற்றதுஒன் று என்பால்!
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
எந்தையே! ஈசா! உடல்இடம் கொண்டாய்!
யான்இதற்கு இலன்ஒர் கைம் மாறே.

— மணிவாசகர்.

## 52

கண்டுகேட்டு உற்றுமோந்து
உண்டுஉழலும் ஐங்கருவி
கண்டஇன்பம் தெரிவரிய
அளவில்லாச் சிற்றின்பம்;
ஒண்தொடியாள் திருமகளும்
நீயுமே நிலாநிற்பக்
கண்டசதிர் கண்டுஒழிந்தேன்
அடைந்தேன்உன் திருவடியே!

— நம்மாழ்வார்.

53

பிடியெலாம் பின்செலப்
பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி
விதியினால் வழிபடும்
கடிஉலாம் பூம்பொழில்
கானப்பேர் அண்ணல்! நின்
அடிஅலால் அடைசரண்
உடையரோ? அடியரே.

— சம்பந்தர்.

54

தந்தம் உறியில் அவர்வைத்த
தயிர்பால் வெண்ணெய் எட்டாமல்
குந்தி உரலின் மிசைஏறி
இளங்கோவியர்முன் கூத்தாடி
நந்தன் மனையில் அசோதைஇரு
நயனம் களிக்க விளையாடும்
மைந்தன் இருதாள் ஒருபோதும்
மறவா தாரே பிறவாதார்.

— வில்லிபுத்தூராழ்வார்.

## 55

மாவடு வகிர்அன்ன கண்ணிபங்
கா ! நின் மலர் அடிக்கே
கூவிடு வாய் ! கும்பிக் கேஇடு
வாய் ! நின் குறிப்பு அறியேன் ;
பாஇடை ஆடு குழல்போல்
கரந்து பரந்தது உள்ளம் ;
ஆ ! கெடு வேன் ; உடை யாய் ! அடி
யேன் உன் அடைக்கலமே.

— மணிவாசகர்.

## 56

வங்கத்தால் மாமணிவந்து உந்தும் முந்நீர்
மல்லையாய் ! மதிள்கச்சி ஊராய் ! பேராய் !
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்,
பங்கத்தாய் ! பாற்கடலாய் ! பாரின் மேலாய் !
பணிவரையின் உச்சியாய் ! பவள வண்ணா !
எங்குஉற்றாய் ! எம்பெருமான் ! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதரு கேனே.

— திருமங்கையாழ்வார்.

## 57

அழுக்கு மெய்கொடுஉன் திருவடி அடைந்தேன் !
அதுவும் நான்படப் பாலதுஒன் று ஆனல் !
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள் !
பிழைப்பன் ஆகினும் திருவடிப் பிழையேன்.
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்று நான் அறி யேன்மறு மாற்றம் ;
ஒழுக்க என்கணுக்கு ஒருமருந்து உரையாய் !
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வோனே !

— சுந்தரர்.

## 58

வெங்கட் திண் களிறுஅடர்த்தாய் !
வித்துவக்கோட்டு அம்மானே !
எங்குப்போய் உய்கேன்உன்
இணைஅடியே அடையல்அல்லால் ;
எங்கும்போய்க் கரைகாணது
எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்புஏறும்
மாப்பறவை போன்றேனே.

—குலசேகராழ்வார்.

## 59

நாயில் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்!
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட்டு இருக்கும் அதுஅன்றி!
ஆயக் கடவேன் நானோதான்?
என்ன தோஇங்கு அதிகாரம்?
காயத்து இடுவாய்! உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய்! கண்ணுதலே!

— மணிவாசகர்.

## 60

அயல்நின்ற வல்வினையை
அஞ்சினேன், அஞ்சி
உயநின் திருவடியே
சேர்வான், — நயநின்ற
நன்மாலை கொண்டு
“நமோநாரணா” என்னும்
சொன்மாலை கற்றேன் தொழுது.

— பொய்கையாழ்வார்.

## 61

இழைத்த இடையாள் உமையாள்
பங்கர் இமையோர் பெருமானார்
தழைத்த சடையார் விடை ஒன்று
ஏறித் தறியார் புரம்எய்தார்
பிழைத்த பிடியைக் காணாது
ஓடிப் பெருங்கை மதவேழம்
அழைத்துத் திரிந்துஅங்கு உறங்கும்
சாரல்அண்ணா மலையாரே.

— சம்பந்தர்.

## 62

தேவரையும் அசுரரையும்
திசைகளையும் படைத்தவனே!
யாவரும்வந்து அடிவணங்க
அரங்கநகர்த் துயின்றவனே!
காவிரிநல் நதிபாயும்
கணபுரத்துஎன் கருமணியே!
ஏவரிவெம் சிலைவலவா!
இராகவனே! தாலேலோ.

— குலசேகராழ்வார்.

## 63

கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்துஉண்ண,
இடரே பெருக்கி ஏசற்றுஇங்கு
இருத்தல் அழகோ அடிநாயேன்!
உடையாய்! நீயே அருளுதிஎன்று
உணர்த்தாது ஒழிந்தே கழிந்துஒழிந்தேன்;
சுடர்ஆர் அருளால் இருள்நீங்கச்
சோதி! இனித்தான் துணியாயே.

— மணிவாசகர்

## 64

தானே தனக்குஒத்த தாள்தா
மரைக்குச் சரண்புகுந்துஆள்
ஆனேன், இனிஉன் அருள்நெறி
யேன்,எனது ஆருயிரே!
தேனே!என் தீவினைக்கு ஓர்மருந்
தே!பெருந் தேவர்க்கெல்லாம்
கோனே! அரங்கத்து அரவணை
மேற்பள்ளி கொண்டவனே!

— பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

65

அழல்ஆடி அங்கை
 சிவந்ததோ ! அங்கை
அழகால் அழல்சிவந்த
 வாறோ !—கழல்ஆடப்
பேய்ஆடு கானில்
 பிறங்க அனல்ஏந்தித்
தீயாடு வாய்!இதனைச் செப்பு.

— காரைக்கால் அம்மையார்.

66

வேதங்கள் அறைகின்ற
 உலகுளங்கும் விரிந்தன,உன்
பாதங்கள் இவைஎன்னில்
 படிவங்கள் எப்படியோ !
ஓதங்கொள் கடல்அன்றி
 ஒன்றினோடு ஒன்றுஒவ்வாப்
பூதங்கள் தொறும்உறைந்தால்
 அவைஉன்னைப் பொறுக்குமோ.

— கம்பர்.

## 67

பிணக்குஇ லாதபெ ருந்து றைப்பெரு
மான்! உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்குஇ லாததோர் இன்ப மேவரும்
துன்ப மேதுடைத்து எம்பிரான்!
உனக்குஇ லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்குஇ லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்! கழுக் குன்றிலே.

— மணிவாசகர்.

## 68

முருகனே! செந்தி
முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன்
மகனே!—ஒருகைமுகன்
தம்பியே! நின்உடைய
தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

— நக்கீரர்.

69

தனக்கே அடியனாய்த்
தன் அடைந்து வாழும்
எனக்கே அருளாவாறு
என்கொல்? — மனக்கு இனிய
சீராளன், கங்கை
மணவாளன், செம்மேனிப்
பேராளன், வானோர் பிரான்.

— காரைக்கால் அம்மையார்.

70

செங்கணா போற்றி! திசைமுகா போற்றி!
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா! போற்றி! அமரனே! போற்றி!
அமரர்கள் தலைவனே! போற்றி!
தங்கள் நான் மறைநூல் சகலமும் கற்றோர்
சாட்டியக் குடியிருந்து அருளும்
எங்கள் நா யகனே! போற்றி! ஏழ்இருக்கை
இறைவனே! போற்றியே! போற்றி!

— கருவூர்த்தேவர்.

## 71

மூஇரு முகங்கள் போற்றி !
முகம்பொழி கருணை போற்றி !
ஏவரும் துதிக்க நின்ற
இராறுதோள் போற்றி ! காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலர்அடி போற்றி ! அன்னான்
சேவலும் மயிலும் போற்றி!
திருக்கைவேல் போற்றி ! போற்றி !

— கச்சியப்பசிவாச்சாரியார்.

## 72

கொள்ளித் தலையின் எறும்பது
போலக் குலையும்என் தன்
உள்ளத் துயரை ஒழித்தரு
ளாய் !ஒரு கோடிமுத்தம்
தெள்ளிக் கொழிக்கும் கடல்செந்தில்
மேவிய சேவகனே !
வள்ளிக்கு வாய்த்தவ னே !மயில்
ஏறிய மாணிக்கமே !

— அருணகிரிநாதர்.

## 73

தேடிய அகலிகை
சாபம் தீர்த்ததாள் ;
நீடிய உலகுஎலாம்
அளந்து நீண்டதாள் ;
ஓடிய சகடுஇற
உதைத்தும், பாம்பின்மேல்
ஆடியும் சிவந்ததாள் ;
என்னை ஆண்டதாள்.

— வில்லிபுத்தூராழ்வார்.

## 74

எனக்குஇனிய எம்மானை
ஈசனையான் என்றும்
மனக்குஇனிய வைப்பாக
வைத்தேன் ;— எனக்குஅவனைக்
கொண்டேன் பிரானாக ;
கொள்வதுமே இன்புஉற்றேன்
உண்டே? எனக்குஅரியது ஒன்று

—காரைக்கால் அம்மையார்.

## 75

வீரவேல்! தாரைவேல்!
விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல்! செவ்வேள்
திருக்கைவேல்!— வாரி
குளித்தவேல்! கொற்றவேல்!
சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல்! உண்டே துணை.

— நக்கீரர்.

## 76

கெடுவேன்! கெடுமா கெடுகின்றேன்;
கேடுஇ லாதாய்! பழிகொண்டாய்;
படுவேன், படுவது எல்லாம்நான்
பட்டால் பின்னைப் பயன்என்னே!
கொடுமா நரகத்து அழுந்தாமே
காத்துஆட் கொள்ளும் குருமணியே!
நடுவாய் நில்லாது ஒழிந்தக்கால்
நன்றோ? எங்கள் நாயகமே.

— மணிவாசகர்.

77

உருமாறிப் பலபிறப்பும் பிறந்தும் செத்தும்
ஊசலா டுவது, அடியேன் ஒழியும் வண்ணம்
கருமாயத்து என்நெஞ்சைப் பலகை ஆக்கிக்
கருணைஎனும் பாசத்தைக் கயிறுப் பூட்டி
மருமாலைத் துளவுஅசைய ஆடீர் ஊசல்!
மணிமகரக் குழைஅசைய ஆடீர் ஊசல்!
திருமாது புவிமாதோடு ஆடீர் ஊசல்!
திருவரங்க ராசரே! ஆடீர் ஊசல்!

— பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

78

பிறந்து மொழிபயின்ற
பின்எல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே
சேர்ந்தேன்! — நிறம்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து
வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்?

— காரைக்கால் அம்மையார்.

## 79

அஞ்சுமுகம் தோன்றில்
ஆறு முகம்தோன்றும்;
வெஞ்சமரில் அஞ்சல்என
வேல்தோன்றும் ;– நெஞ்சில்
ஒருகால் நினைக்கில்
இருகாலும் தோன்றும் ;
முருகா !என்று ஓதுவார் முன்.

— நக்கீரர்.

## 80

கைஒன்று செய்ய விழிஒன்று
நாடக் கருத்துஒன்றுஎண்ணப்
பொய்ஒன்று வஞ்சக நாஒன்று
பேசப் புலால்கமழும்
மெய்ஒன்று சாரச் செவிஒன்று
கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசைஎவ் வாறுகொள்
வாய் !வினை தீர்த்தவனே !

— பட்டினத்தார்.

## 81

மண்கண்ட வெண்குடைக் கீழாக
  மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவில் பணியச்செய்
  வாய் !படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடிஉண்
  டேனும் விளம்பில்உன் போல்
கண்கண்ட தெய்வம் உளதோ ?
  சகல கலாவல்லியே !

— குமரகுருபரர்.

## 82

சிற்றறிவு உடையன் ஆகித்
  தினந்தோறும் திரிந்து நான்செய்
குற்றமும் குணமாகக் கொண்ட
  குணப்பெருங் குன்றே ! என்னைப்
பெற்றதா யினுமிக்கு ஓங்கும்
  பெரும ! நின் பெருமை தன்னைக்
கற்றறிவு இல்லேன் ; எந்தக்
  கணக்குஅறிந்து உரைப்பேன் ; அந்தோ !

— இராமலிங்க சுவாமிகள்.

83

ஓத வினை அகலும் ;
ஓங்கு புகழ்பெருகும் ;
காதற் பொருள் அணைத்தும்
கைகூடும் ; — சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல்
பாரதப்போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்.

— **பெருந்தேவனார்.**

84

தாயினும் இனிய நின்னைச்
சரண் என அடைந்த நாயேன்,
பேயினும் கடையன் ஆகிப்
பிதற்றுதல் செய்தல் நன்றோ ?
தீஇடை மெழுகாய் நொந்தேன் ;
தெளிவிலேன் ; வீணே காலம்
போயினது ; ஆற்று கில்லேன்
பூரண னந்த வாழ்வே.

— தாயுமானார்.

## 85

சொல்லுவது அறியேன் வாழி!
தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந்து அருளி என்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்குஅருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்துள் ஆடும்
சேவடி போற்றி! போற்றி!!

— சேக்கிழார்.

## 86

இளங்கொடி தனைக்கொண்டு ஏகும்
இராவணன் தனை அ ழித்தே
களங்கம்இல் விபீட ணர்க்குக்
கன அரசு அளித்தாய் போற்றி!
துளங்குமா தவத்தோர் உற்ற
துயர்எலாம் தவிர்த்தாய் போற்றி!
விளங்குநல் எவ்வு ளூர்வாழ்
வீரரா கவனே! போற்றி!

— இராமலிங்க சுவாமிகள்.

## 87

மாய னே! மறி கடல்விடம் உண்ட
வான வா! மணி கண்டத்துஎம் அமுதே!
நாயி னேன்உனை நினையவும் மாட்டேன்;
"நமச்சி வாய" என்று உன்அடி பணியாப்
பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்.
பிறைகு லாம்சடைப் பிஞ்ஞக னேயோ!
சேயன் ஆகிநின்று அலறுவது அழகோ?
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே!

— மணிவாசகர்.

## 88

மைவரும் கண்டத்தர் மைந்தகந்
தாஎன்று வாழ்த்தும்இந்தக்
கைவரும் தொண்டுஅன்றி மற்றுஅறி
யேன்; கற்ற கல்வியும்போய்ப்
பைவரும் கேளும் பதியும்
கதறப் பழகிநிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும்
போதுஉன் அடைக்கலமே.

— அருணகிரிநாதர்.

## 89

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புறங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

— சேந்தனார்.

## 90

திருமகள்எம் பெருமாட்டி மகிழும் வண்ணச்
செழுங்கனியே! கொழும்பாகே! தேனே! தெய்வத்
தருமகனைக் காத்தருளக் கரத்தே வென்றித்
தனுஎடுத்த ஒருமுதலே! தருமப் பேறே!
இருமையும்என் உளத்துஅமர்ந்த இராமநாமத்து
என்அரசே! என்அமுதே! என்தா யேநின்
மருமலர்ப்பொன் அடிவழுத்தும் சிறியேன் அந்தோ!
மனம்தளர்ந்தேன்; அறிந்தும்அருள் வழங்கி லாயே.

— இராமலிங்க சுவாமிகள்.

## 91

மொய்தார் . அணிகுழல் வள்ளியை
வேட்டவன்; முத்தமிழால்
வைதா ரையும்அங்கு வாழவைப்
போன்;வெய்ய வாரணம்போல்
கைதான் இருபது உடையான்
தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள்
பயந்த இலஞ்சியமே.

— அருணகிரிநாதர்.

## 92

"நல்காது ஒழியான் நமக்கு"என்றுஉன்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா, வாழ்த்தா, வாய்குழறு,
வணங்கா, மனத்தால் நினைத்துஉருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்அம் பலம்என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்குஇரங்கி
அருளாய்! என்னை உடையானே!

— மணிவாசகர்.

## 93

பொருப்புஅடைந்து தங்கள்
புலன் ஐந்தும் செற்று
நெருப்புஅடைந்து நீர் அடைய
வேண்டாம்; — விருப்புஅடைந்து
வைகுந்தம் சிந்தையிலே
வைப்பார்க்கு மாதவனும்
வைகும், தம் சிந்தையுளே வந்து.

**— பெருந்தேவனார்.**

## 94

கண்டம் கரியமலை
கண்மூன்று உடையமலை;
அண்டர்எலாம் போற்றற்கு
அரியமலை; — தொண்டருக்குத்
தோற்றுமலை; நாளும்
தொழுவோர் எழுபிறப்பை
மாற்றுமலை அண்ணா மலை.

**— குருநமச்சிவாயர்.**

95

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்புஇலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே.

— மணிவாசகர்.

96

கலையெலாம் புகலும் கதியெலாம் கதியில்
காண்கின்ற காட்சிகள் எல்லாம்
நிலையெலாம் நிலையின் நேர்ந்துஅநு பவஞ்செய்
நிறைவுஎலாம் விளங்கிடப் பொதுவில்
மலைவுஇலாச் சோதி அருட்பெரும் செங்கோல்
வாய்மையால் நடத்தும்ஓர் தனிமைத்
தலைவனே! எனது தந்தையே! நினது
தனையன்நான் தளருதல் அழகோ!

— இராமலிங்க சுவாமிகள்.

## 97

சூலம் பிடித்துஎம பாசம்
சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் தனக்குஒரு காலும்அஞ்
சேன்;கடல் மீதுஎழுந்த
ஆலம் குடித்த பெருமான்
குமாரன் அறுமுகவன்
வேலும் திருக்கையும் உண்டே
நமக்குஒரு மெய்த்துணையே.

— **அருணகிரிநாதர்.**

## 98

என்னை "அப் பா! அஞ்சல்!" என்பவர்
இன்றிநின்று எய்த்துஅலைந்தேன்;
மின்னைஒப் பாய்!விட் டிடுதிகண்
டாய்!உவ மிக்கின்மெய்யே
உன்னைஒப் பாய்!மன்னும் உத்தர
கோசமங் கைக்குஅரசே!
அன்னைஒப் பாய்!எனக்கு அத்தன்ஒப்
பாய்!என் அரும்பொருளே!

— **மணிவாசகர்.**

## 99

அடியோ மோடும் நின்னோடும்
  பிரிவுஇன் றி ஆயிரம் பல்லாண்டு!
வடிவாய் நின்வல மார்பினில்
  வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு!
வடிவார் சோதி வலத்துறை
  யும்சுடர் ஆழியும் பல்லாண்டு!
படைபோர் புக்கு முழங்கும்அப்
  பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே!

— பெரியாழ்வார்

## 100

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
  தூய்மனத் தொண்டர் உள்ளீர்!
சில்லாண் டில்சிதை யும்சில
  தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
  மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டு என்னும் பதம்கடந்
  தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்.


## 101

சீதமழை முகில் பொழிக!
　தேசமெலாம் பயிர்விளைக! செல்வம்ஓங்க!
மாதர்குழாம் மக்கள்குழாம் மனையறங்க
　ளுடன்பொலிந்து மலிந்து வாழ்க
மேதகுசீர்ச் சைவநெறி வேதநெறி
　தழைத்தோங்க! மேலும் மேலும்
பூதலமேல் சிவபெருமான் ஆலயங்கள்
　பூசனைகள் பொலிக மாதோ!

**— திரிகூடராஜப்பக்கவிராயர்.**

| தொடர் எண் | பாட்டு முதற் குறிப்பு | பாட்டு எண் | தொடர் எண் | பாட்டு முதற் குறிப்பு | பாட்டு எண் |
|---|---|---|---|---|---|
| 85 | மனத்தில் ஓர் | 19 | 94 | மைவரும் | 88 |
| 86 | மாணிக்கம் கட்டி | 11 | 95 | மொய்தார் | 91 |
| 87 | மாயனேமறி | 87 | 96 | யானேதவம் | 27 |
| 88 | மாவடு வகிர் | 55 | 97 | வங்கத்தால் | 56 |
| 89 | முருகனே | 68 | 98 | வீரவேல் | 75 |
| 90 | முன் ஒரு நாள் | 46 | 99 | வெங்கட்திண் | 58 |
| 91 | முன்னம் பிறந்த | 31 | 100 | வேதங்கள் | 66 |
| 92 | மு இரு முகங்கள் | 71 | 101 | வையம் தகனியா | 23 |
| 93 | மேல் வைத்த | 49 | | | |


* இவை "பூசைப் பாமாலை"யிலும் இடம் பெற்றுள்ளன.



பாரதியாருக்கு வலதுபுறம், ராய. சொ.
இடதுபுறம், சொ. முரு.
(9—11—1919)

| தொடர் எண் | பாட்டு முதற் குறிப்பு | பாட்டு எண் | தொடர் எண் | பாட்டு முதற் குறிப்பு | பாட்டு எண் |
|---|---|---|---|---|---|
| 1 | அஞ்சுமுகம் | 79 | 22 | எம்பிரான் * | 41 |
| 2 | அடியேன் | 42 | 23 | என்பும் தழுவிய | 28 |
| 3 | அடியோமோடும் | 99 | 24 | என்னை அப்பா | 98 |
| 4 | அப்பு அணி | 24 | 25 | என்னை உன் | 20 |
| 5 | அம்மையே அப்பா | 2 | 26 | எனக்கு இனிய | 74 |
| 6 | அயல் நின்ற | 60 | 27 | ஐந்துகரத்தனை | 1 |
| 7 | அழலாடி | 65 | 28 | ஒளிவளர் | 18 |
| 8 | அழுக்கு மெய் | 57 | 29 | ஓதவினை | 83 |
| 9 | அளிக்கும் | 7 | 30 | கடலே அனைய | 63 |
| 10 | அன்றும் | 16 | 31 | கடிமலர் | 36 |
| 11 | ஆதி நடம் | 38 | 32 | கண்டம் கரிய | 94 |
| 12 | ஆரா அமுதே | 3 | 33 | கண்டு கேட்டு | 52 |
| 13 | இது என் புகுந்தது | 15 | 34 | கண்ணாய் | 12 |
| 14 | இழைத்த இடை | 61 | 35 | கமலம் மேவு | 6 |
| 15 | இளங் கொடி | 86 | 36 | கருவாய்க்கிடந்து * | 8 |
| 16 | இன்னிசை வீணை | 35 | 37 | கலையெலாம் | 96 |
| 17 | உலகம் யாவை | 29 | 38 | கற்றவர் விழுங்கும் | 89 |
| 18 | உலகெலாம் | 30 | 39 | காக்கக் கடவிய | 4 |
| 19 | உருமாறி | 77 | 40 | குறைவு இலா | 45 |
| 20 | ஊரிலேன் | 48 | 41 | கெடுவேன் | 76 |
| 21 | ஊனிடை | 9 | 42 | கையொன்று | 80 |

| தொடர் எண் | பாட்டு முதற்குறிப்பு | பாட்டு எண் | தொடர் எண் | பாட்டு முதற்குறிப்பு | பாட்டு எண் |
|---|---|---|---|---|---|
| 43 | கொண்டல் | 21 | 64 | துப்பு உடையாரை | 50 |
| 44 | கொள்ளித்தலையின் | 72 | 65 | தெரியேன் | 44 |
| 45 | சங்கேந்தும் | 26 | 66 | தேடிய அகலிகை | 73 |
| 46 | சிற்றறிவு | 82 | 67 | தேவரையும் | 62 |
| 47 | சீதமழை | * 101 | 68 | நல்காது | 92 |
| 48 | சுரும்பு முரல் | 5 | 69 | நற்பதத்தார் | 43 |
| 49 | சூலம் பிடித்து | 97 | 70 | நாடிப் புலங்கள் | 39 |
| 50 | செங்கணு | 70 | 71 | நாயில் கடையாம் | 59 |
| 51 | செடியாய | 13 | 72 | நின் எழில் | 37 |
| 52 | சொல்லாண்ட | * 100 | 73 | நின்றது | 17 |
| 53 | சொல்லுவது | 85 | 74 | நீர் கொண்ட | 10 |
| 54 | தந்தது உனதன்னை | 51 | 75 | படிக்கும் திருப்புகழ் | 33 |
| 55 | தந்தம் உறியில் | 54 | 76 | பால்நினைந்து | 95 |
| 56 | தனக்கே அடிய | 69 | 77 | பிடியெலாம் | 53 |
| 57 | தனம் தரும் | 40 | 78 | பிணக்கு இலாத | 67 |
| 58 | தாயினும் இனிய | 84 | 79 | பிறந்து மொழி | 78 |
| 59 | தாழ்சடையும் | 25 | 80 | பொருப்படைந்து | 93 |
| 60 | தானே தனக்கு | 64 | 81 | மடம் தாழும் | 34 |
| 61 | திருமகள் | 90 | 82 | மண்கண்ட | 81 |
| 62 | திருவாக்கும் | * 32 | 83 | மண்ணும் தணல் | 14 |
| 63 | துங்க மழு | * 22 | 84 | மருளனேன் | 47 |